வார மலர்
மின்னிதழ்
தேசியம்
THESIYAM ජේසියම්
www.thesiyamnews.com




குரல்: 01 | பங்குனி மாதம் 29.03.2023 புதன்கிழமை | பக்கங்கள்: 14

# நீதி பொறிமுறைகள் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டன

## சர்வதே மன்னிப்புச்சபை கவலை

சுயாதீனமாக செயற்படமுடியாதவர்கள் என கருதப்படும் நபர்களின் நியமனங்கள் காரணமாக காணாமல் போனோர் அலுவலகம் இழப்பீட்டிற்கான அலுவலகம் போன்ற உள்நாட்டு நிலைமாற்றுக்கால அமைப்புகள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டன என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

2022 -23ம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் இலங்கை நிலவரம் குறித்து வெளியிட்ட அறிவிப்பிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை இவ்வாறு தெரிவித்துள்ளது.

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...



வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்டமைக்கு நேற்று செவ்வாய்க்கிழமை மாலை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லூரில் போராட்டத்தைக் காணலாம்.

## வெடுக்குநாறிமலை அராஜகம் விசாரணைக்கு ரணில் பணிப்பு
### என்கிறார் மாவை



வவுனியா வடக்கு வெடுக்குநாறி மலையிலுள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இடித்தழித்தது தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறும், மீள அமைத்துக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தினை முற்றாக எதிர்க்கிறோம்



பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தினை முற்றாக எதிர்க்கிறோம் என தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

பயங்கரவாத தடை சட்டம் நீக்கப்பட்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்கிற புதிய சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

## கட்சியின் யாப்பு விதி முறைகளுக்கு அமையவே தலைவர், செயலாளர் தெரிவு

இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் தலைவர் மற்றும் செயலாளர் கட்சியின் யாப்பு விதி முறைகளுக்கு அமையவே தெரிவு செய்யப்படுவார்கள்.

யாரும் அவசரப்படுவதால் பயன் இல்லை என இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

### அலி சப்ரி, விஜயதாச தென்னாபிரிக்க விஜயம்;
## அந்நாட்டு மனித உரிமை அமைப்புகள் கடும் அதிருப்தி

இலங்கையின் யுத்தகுற்றத்துடன் தொடர்புடைய நபர்களை நல்லிணக்கம் மற்றும் நிலைமாற்றுக்கால நீதி அறிந்துகொள்வதற்காக தென்னாபிரிக்க அரசாங்கம் அழைத்துள்ளமை குறித்து அந்த நாட்டின் மனித உரிமை அமைப்புகள் கூட்டாக கேள்வி எழுப்பியுள்ளன.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் இதனை தெரிவித்துள்ளது.

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

## ஆதிலிங்கேஸ்வரர் அராஜக பின்னணியில் அரசு



வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் சேதமாக்கப்பட்ட சம்பவத்தில் அரசாங்கத்தின் பின்னணி இருப்பதாக யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் குற்றம் சாட்டியுள்ளார்.

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

## ஆதிலிங்கேஸ்வரர் அராஜக பின்னணியில் அரசு

யாழ்ப்பாணத்தில் (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்த செயற்பாட்டின் மூலம், முற்று முழுதாக மத பிரிவினைவாதத்தை ஏற்படுத்தி, அதனூடாக சிலர் அரசியல் லாபத்தை அடைய எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சகலரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் வலியுத்தியுள்ளார்.

## அலி சப்ரி, விஜயதாச தென்னாபிரிக்க விஜயம்;

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவும் தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பிற்கான அமைச்சர் நலெடி பன்டுரின் அழைப்பின் பேரில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர் என அந்த அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்கஅனுபவங்களை கற்றுக்கொள்வதே இந்த விஜயத்தின் நோக்கம் என அறிவிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

தெரிவிக்கப்பட்ட நோக்கங்கள் உயர்வானவை என்ற போதிலும் தொடரும் மனித உரிமை மீறல்கள் இலங்கையில் சிவில் சமூகம் ஒடுக்கப்படுவது மற்றும் 1983 முதல் 2009 வரையான உள்நாட்டு போரின் போது இழைக்கப்பட்ட மோசமான மனித உரிமை மீறல்களிற்கு குற்றவியல் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தவறியது இலங்கை அதிகாரிகளிற்கான தென்னாபிரிக்காவின் அழைப்பு கரிசனையளிக்கின்றது எனவும் தென்னாபிரிக்காவின் மனித உரிமை அமைப்புகள் கூட்டாக தெரிவித்துள்ளன.

இந்த குற்றச்சாட்டுகளில் சில பாரதூரமான மனித குலத்திற்கு எதிரான மற்றும் யுத்த குற்றங்கள் போன்ற பாரிய மனித உரிமை மீறல்களாக இருக்கலாம் என ஐக்கிய நாடுகள் தெரிவித்துள்ளது எனவும் மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் குறுகிய பகுதிக்குள் குறுகிய காலத்தில் 40,000 முதல் 70,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என ஐநா மதிப்பிட்டுள்ளது.

தென்னாபிரிக்காவிற்கு அழைக்கப்பட்டுள்ள இரண்டு அதிகாரிகளும் பாரதூரமான சர்வதேச குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகளிற்கு உள்ளாகியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுடன் நெருக்கமானவர்கள் என தெரிவித்துள்ள தென்னாபிரிக்காவின் மனித உரிமை அமைப்புகள் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி கட்டத்தில் இழைக்கப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்கள் பாரதூரமான சர்வதேச குற்றங்கள் தொடர்பில் சமீபத்தில் சிங்கப்பூரில் சர்வதேச நியாயாதிக்த்தின் அடிப்படையில் கோட்டாபய ராஜபக்சவிற்கு எதிராக மனுதாக்கல் செய்யப்பட்டது என்பதையும் குறிப்பிட்டுள்ளன.

2019 இல் ராஜபக்சவிற்கு எதிராக வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் தென்னாபிரிக்காவின் மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கோட்டாபய ராஜபக்ச தான் ஆட்சியில் இருந்த காலத்தில் தனது சகாக்கள் சிலரை உயர் பதவிகளில் நியமித்தார்.

இவர்களில் சிலருக்கு எதிராக பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமைக்காக அமெரிக்கா கனடா போன்ற நாடுகள் தடைகளை விதித்துள்ளன.

வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி கோட்டாபய ராஜபக்சவின் தனிப்பட்ட சட்டத்தரணி அவருக்காக பல ஊழல் வழக்குகளில் ஆஜரானார் வெளிவிவகார அமைச்சராவதற்கு முன்னர் அவர் நீதியமைச்சராக பதவி வகித்தார் அந்த காலத்தில் ஜனாதிபதியாக பதவி வகித்தவர் கோட்டாபய ராஜபக்ச எனவும் தென்னாபிரிக்க மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

## வெடுக்குநாறிமலை அராஜகம் விசாரணைக்கு

ஆலய இடித்தழிப்புத் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு வசர கடிதம் ஒன்று மாவை. சேனாதிராசாவால் அனுப்பிவைக்கப்பட்டது.

அதில், ஆலயம் இடித்தழிக்கப்பட்டமை இந்து மக்களின் உரிமையை பறிக்கும் செயல் என்றும், ஆலயத்தை அதே இடத்தில் மீள அமைத்துக் கொடுக்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மாவை.சேனாதிராசாவின் கடிதத்தையடுத்து அவரை தொலைபேசியூடாக தொடர்புகொண்டு பேசியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

'அமைச்சரவைக் கூட்டம் இப்போதுதான் முடிந்தது. நீங்கள் அனுப்பிய அவசரக் கடிதத்தை பார்த்தேன். ஆலயம் இடித்தழிக்கப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணையை முன்னெடுக்கப் பணித்துள்ளேன். அதனை மீள அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்குமாறும் பணிப்புரை விடுக்கவுள்ளேன்' என்று அதிபர் ரணில் விக்ரமசிங்க மாவை.சேனாதிராசாவிடம் கூறியுள்ளார்.

## கட்சியின் யாப்பு விதி முறைகளுக்கு அமையவே

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இரு பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் முன்வைக்கப்படுவதாக கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் தலைவர் மற்றும் செயலாளர் விதிகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படுவார்கள். இப்போது யாருக்கும் அந்தப் பிரச்சினைத் தொடர்பில் சந்தேகம் எழுந்திருக்கவில்லை.

தமிழரசுக்கட்சியின் கிளைகள் அமைப்பது தொடர்பான வேலைகள் முடிந்தவுடன் விரைவில் மாநாடு நடைபெறும். அந்தமாநாட்டில் யார் எந்தந்த பொறுப்புகளுக்கு வருவார்கள் என்பது தொடர்பில் தெரிவுசெய்யப்படுவார்கள்.

அந்த மாநாட்டின் பொது அந்தப் பொதுக்குழுவுக்கு எந்தந்த பதவிகளுக்கு யார் யார் வரவிரும்புகின்றார்கள் என்பதை அமைப்பு விதிகளின் படி விண்ணப்பம் செய்வார்கள்.

அப்போது நாங்கள் இனக்க அடிப்படையில் அதற்குப் பொருத்தமான ஒவ்வொருவரின் பெயர்களையும் ஆதரவுகளைத் தெரிவித்து தீர்மானம் செய்வோம். இதுவே நடைமுறை ஜனநாயக முறையாகும். இதனைவிடுத்து யாரும் அவசரப்படுவதைப்பற்றி எனக்குத் தெரியாது என்றார்.

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தினை முற்றாக...

பயங்கரவாத தடுப்புச் சட்டம் 40 வருடங்களுக்கு மேலாக நாட்டிலே நடைமுறையில் இருக்கின்றது. இது அனைவருக்கும் தெரிந்திருக்கின்றது.

இது ஆரம்பத்தில், ஆறு மாத காலத்திற்காக ஒரு தற்காலிக சட்டமாக கொண்டுவரப்பட்டு பின்னர் சில வருடங்களுக்கு பிறகு 81 ஆம் ஆண்டு அது நிரந்தரமான சட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

மிகவும் மோசமான ஒரு சட்டம் என பலராலே விமர்சிக்கப்படுகின்ற சட்டம், அதை நீக்குவதாக தற்போதைய அதிபர், பிரதமராக இருந்த போது 2017ஆம் ஆண்டு அறிவித்திருந்தார். ஐரோப்பிய சங்கத்திற்கு வாக்குறுதியும் அளித்திருந்தார். அதற்கு பிறகு தான் பயங்கரவாத தடை சட்டத்தை மாற்றி பயங்கரவாத தடுப்புசட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

அது மக்கள் பிரதிநிதிகளோடும் பொது அமைப்புகளோடும் கலந்துரையாடப்பட்டு அந்த வேளையிலே பல தவறுகளை சுட்டிக்காட்டி பல திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பை சாட்டாக வைத்து அதனை நிறைவேற்றாமல் கைவிட்டார்கள்.

இப்பொழுது கொண்டு வந்திருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு ஒப்பானது அல்ல, இப்பொழுது இருக்கின்ற பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை விட மோசமானதாக காணப்படுகின்றது.

தமிழ் மக்களுக்கு ஏற்கனவே நடந்த அத்து மீறல்கள் தொடர்பில் பொறுப்பு கூறல்களை கூறுவது எல்லாவற்றையும் இருப்பதையும் விட மோசமாக கொண்டு வரப்படுகின்றது. பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை நாங்கள் முற்று முழுதாக எதிர்க்கிறோம். அதனை நிராகரிக்கின்றோம். அதற்கு எதிரான சட்டநடவடிக்கை எடுப்போம்.

அதற்கு மேலாக புதிய சட்டம் கொண்டுவரப்படுவதாக இருந்தால், அது முதலிலே பொது அமைப்புக்களோடு பேசி இணங்கப்பட வேண்டிய விடயம் ஆனால் இதில் இன்னொரு விடயத்தை குறிப்பிட வேண்டும் பயங்கரவாத தடுப்பு சட்டம் நீக்கப்படல் சம்பந்தமாக மனித உரிமை ஆணைக்குழு ஏற்கனவே சென்ற வருடம் ஒரு சிபாரிசினை முன்வைத்திருக்கின்றது.

அதாவது பயங்கரவாதத்திற்கான ஒரு விசேட சட்டம் தேவையில்லை என்று, எனவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற புதிய சட்டம் அரசாங்கம் கொண்டு வருவதை நாங்கள் எதிர்க்கின்றோம். குறிப்பாக அரசாங்கமானது தான் செல்லுகின்ற பாதை ஜனநாயகத்துக்கு விரோதமான செயல் என்பதை அறியும், தேர்தல்கள் நடத்தப்படாமல் ஜனநாயக பாதையில் இருந்து அரசாங்கம் விலகி மாகாண சபை தேர்தலை பலகாலம் முடக்கி வைத்து தற்பொழுது உள்ளூராட்சி சபை தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகும் கூட அதனை நடத்தாது நிதி நிலைமையை காரணம் காட்டி நாட்டில் ஒரே ஒரு நபர் தடுத்து வைத்திருக்கின்றார்.

இந்த செய்கையின் மூலமாக இது ஒரு ஜனநாயக ஆட்சி முறை இல்லை ஒரு தனி மனித சர்வாதிகார ஆட்சி நாட்டிலே நடக்கின்றது என்பதற்கு இதுவே சிறந்த உதாரணமாக இருக்கின்றது.

ஆகையினால் இந்த மோசமான சூழலிலே இப்படியான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற ஒரு விசேட சட்டத்தை கொண்டு வந்து அரசாங்கத்துக்கு எதிராக நியாயமான எதிர்ப்பை தெரிவிக்கின்ற மக்களை அடக்குவதற்கும் ஒடுக்குவதற்கும் தண்டிப்பதற்குமான செயற்பாட்டிலே அரசாங்கம் இறங்கி இருக்கின்றது இதனை வன்மையாக கண்டிக்கின்றோம். இதனை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

## நீதி பொறிமுறைகள் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டன

சுயாதீனமாக செயற்படக்கூடியவர்கள் இல்லை என கருதப்படும் நபர்களின் நியமனங்கள் காரணமாக காணாமல்போனோர் அலுவலகம் இழப்பீட்டிற்கான அலுவலகம் போன்ற உள்நாட்டு நிலைமாற்றுக்கால அமைப்புகள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டன என தனது அறிக்கையில் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் கண்காணிக்கப்படுதல் அச்சுறுத்தல் அமைதியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடமுடியாதவாறு கட்டுப்படுத்தப்படுதல் நினைவுகூறுவதற்கான அனுமதி மறுக்கப்படுதல் போன்றவற்றை எதிர்கொள்வதாக முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

நிதி இழப்பீட்டை ஏற்றுக்கொள்ளுமாறும் மரணச்சான்றிதழை பெற்றுக்கொள்ளுமாறும் அழுத்தங்களிற்குள்ளாவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் துயரங்களிற்கு தீர்வை காண்பதற்கு இலங்கை அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது குறித்து புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.ஆனால் அந்தநடைமுறை நல்லிணக்க பொறிமுறை குறித்த பொதுமக்கள் கலந்தாய்வுகளின் அடிப்படையில் இந்த வருடத்திற்குள் உருவாக்கப்படவேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. தேசிய மனித உரிமை ஆணைக்குழு உட்பட உள்நாட்டு பொறிமுறைகள் தொடர்ந்தும் துருவமயப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றன என சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை நிலவரம் குறித்து தெரிவித்துள்ளது

இலங்கையில் மிகமோசமான பொருளாதார நிலைமைக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அரசாங்கம் உடன்பட மறுப்பவர்களிற்கு எதிரான தனது நடவடிக்கையை தீவிரப்படுத்தியது எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

கருத்துசுதந்திரத்திற்கான உரிமையும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமையும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளினால் கடும் தாக்குதலிற்குள்ளாகின என தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை சில சந்தர்ப்பங்களில் இது சட்டவிரோதமாக பயன்படுத்தப்பட்டதால் இதன் காரணமாக உயிரிழப்பும் காயங்களும் ஏற்பட்டன எனவும் தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தன்னிச்சையாக கைதுசெய்யப்பட்டுள்ளனர் மிகவும் ஆபத்தான பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தினை பயன்படுத்தி தடுத்துவைக்கப்பட்டனர் தடுப்பில் மிக மோசமாக நடத்தப்பட்டனர் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கையின் உள்நாட்டு போரின் போது இழைக்கப்பட்ட மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறல்களிற்கு தீர்வு காணப்படாமலே உள்ளதாக தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை பலவந்தமாக காணாமல்போகச்செய்யப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் தொடர்ந்தும் உண்மை மற்றும் நீதிக்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்திற்கான திருத்தங்கள் முக்கிய மனித உரிமை கரிசனைகளிற்கு தொடர்ந்தும்தீர்வை காண தவறியுள்ளன இந்த சட்டத்தின் கீழ் தமிழர்கள் முஸ்லீம்கள் தொடர்ந்தும் இலக்குவைக்கப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உடன்பட மறுப்போர் மீதான அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகள் பொருளாதார நெருக்கடிக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் வீதிக்கு இறங்கியதும் துரிதமாக மோசமடைந்த ஆர்ப்பாட்டங்கள் அமைதியானவையாக காணப்பட்டபோதிலும் அதிகாரிகள் கருத்து சுதந்திரத்தையும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தையும் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு வழிமுறைகளை பின்பற்றினார்கள் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. பல தடவைகள் சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் ஆர்ப்பாட்டக்காரர்களை தன்னிச்சையாக கைதுசெய்தனர் சிலவேளைகளில் பிடியாணை இல்லாமல் சீருடை அணியாதவர்கள் கடத்தல் பாணியில் கைதுசெய்தல்களை முன்னெடுத்தனர் என இலங்கை குறித்த அறிக்கையில் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

கைதுகளிற்கான காரணங்களும் கைதுசெய்யப்பட்டவர்கள் எங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பதற்கான காரணங்களும் தெரிவிக்கப்படவில்லை எனவும் மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

எரிபொருளிற்காக வரிசையில் நின்றவர்கள் மீது அளவுக்கதிகமான தேவையற்ற பலப்பிரயோகம் இடம்பெற்ற சம்பவங்களும் உள்ளன என மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

சித்திரவதை பலவந்தமாக காணாமல்போகச்செய்யப்படுதல் விசாரணைகள் இன்றி நீண்டகாலமாக தடுத்துவைத்தல் போன்வற்றிற்கு பயன்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் அரசாங்கம் அதனை பயன்படுத்தப்போவதில்லை என்ற உறுதிமொழிக்கு மத்தியிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

தேசியம் THESIYAM
ஆசிரியர் பீடம்
இல.527, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

# தமிழர்கள் முன்னுள்ள ஆபத்தும் தெரிவும்

‘தமிழர் தேசம் சூறையாடப்படுகிறது’ என்பதே இன்று ஒட்டுமொத்த தமிழினத்தினதும் மனக்குமுறலாக இருக்கிறது.ஆனால்,அதனை தடுத்து நிறுத்துவது எப்படி?என்ற கேள்விக்கு தமிழ்மக்களிடமும் பதிலில்லை.தமிழ் தலைமைகள் என்று கூறிக்கொண்டு இருப்பவர்களிடமும் பதிலில்லை.ஆனால் ஏதாவது செய்து இதனை தடுத்து நிறுத்த வேண்டுமென பலர் நினைக்கிறார்கள்.ஆனால் அதனை தலைமை ஏற்று நடத்தப்போவது யார்?என்ற கேள்வி தமிழ் மக்களிடத்தில் தொடரும் கேள்வியாக இருக்கிறது..2009 இற்கு பின்னர் தமிழ் மக்களின் தலைமைகள் என்று கூறிக்கொண்டு வந்தவர்களால் தமிழினம் சாதித்தது என்று எதுவுமில்லை.அதற்கு பதிலாக இழந்தவையே பல.

நீண்டகால யுத்த சூழலால் பொருளாதாரத்தில் பின்னடைந்திருந்தாலும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் உலகுக்கே எடுத்துக்காட்டாக திகழ்ந்த தமிழினம் இன்று போதைப்பொருட்களால் சிதைந்து சின்னாபின்னமாகி போயிருக்கிறது.அதேபோல்,கொலைகளும், கொள்ளைகளும் சமூக சீர்கேடுகளும் நிறைந்த தேசமாக தமிழர் தேசம் உருவெடுத்திருக்கிறது.மறுபுறம் சிங்கள தேசத்தின் தமிழரின் கலை,கலாசார,பண்பாட்டு படுகொலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. ஆனால், இவை தொடர்பில் தமிழ் மக்களின் தலைமைகள் என்று கூறுபவர்களுக்கு அக்கறை இருப்பதாக தெரியவில்லை.

யாழ்.மாவட்டத்தில் 6 விகாரைகள்,கிளிநொச்சியில் 3 விகாரைகள்,மன்னாரில் 20 விகாரைகள்,வவுனியாவில் 35 விகாரைகள்,முல்லைத்தீவில் 67 விகாரைகள் என 131 விகாரைகள் வடக்கில் இருப்பதாக தொல்பொருள் திணைக்களத்தின் அறிக்கை ஒன்று கூறுகிறது. அதனை தாண்டி,படைமுகாம்கள்,காவல்துறை நிலையங்கள்,அரசாங்கத்தின் ஹோட்டல்கள் ஆகியவற்றுக்கு முன்னால் புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.இவை இன்னும் சில காலங்களில் விகாரைகளாக பரிணமிக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.அதேபோல்,கிழக்கு மாகாணம் ஏற்கனவே பறிபோய்விட்டது.இவ்வாறான அச்சுறுத்தல்கள் தமிழர் முன் இருக்கும் நிலையில், தமிழர் தேசம் இவற்றை முறியடிப்பதில் தோற்றுப்போன ஒரு இனமாக இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

இன்றுகூட வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய சிவலிங்கம் உள்ளிட்ட விக்கிரங்களை உடைத்து தூக்கி எறிந்தமைக்கு எதிராக குரல்கொடுப்போரும் போராட்டம் நடத்துபவர்களும் தமிழர் தேசத்தில் இடம்பெறும் ஒட்டுமொத்த இன–மத அழிப்புகளை முன்வைத்து போராட்டம் நடத்துவதை அவதானிக்கமுடியவில்லை. இது தான் தமிழர் தேசத்தின் சாபக்கேடு.தமிழருடைய மண்ணுக்கு வரப்போகின்ற ஆபத்தையும் தமிழருடைய அடையாளங்களுக்கு காத்திருக்கும் ஆபத்துக்கள் தொடர்பிலும் அரசியல்வாதிகள் அக்கறைப்படப்போவதில்லை என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொண்டு,தமிழர் தேசத்தில் இடம்பெறும் அநீதிகளுக்கு எதிராக போராடுவதற்கு புதிய ஒரு பாதையை தெரிவு செய்வது அவசியமாகும்.ஏற்கனவே தமிழரின் விவகாரங்கள் சர்வதேச அரங்குகளில் பேசப்பட்டுவரும் நிலையில்,ஒரு மாபெரும் மக்கள் போராட்டத்தை ஏற்பாடு செய்து சர்வதேசத்தின் கவனத்தை திருப்புவதற்கு சமய தலைவர்களும் புத்திஜீவிகளும் ஒன்றிணைந்து களமிறங்குவது காலத்தின் தேவையாகும் என்பதுடன்,சர்வதேச அரங்கில் தமிழரின் விவகாரத்தை கையாளும் நாடுகளின் தூதுவராலயங்களூடாக தமிழர் தேசத்தில் அரங்கேறும் அநீதிகள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான முயற்சிகளையும் அழுத்தங்களையும் கொடுப்பதற்கு அரசியலை தாண்டி ஒரு கூட்டு முயற்சி அவசியமாகும். இது காலத்தின் அவசர தேவையும் கூட.காலம் கடத்தும் ஒவ்வொரு வினாடியும் தமிழரின் இருப்பு கேள்விக்குறியாகிக்கொண்டிருக்கிறது என்பதை கவனத்தில் கொண்டு அதற்கான முயற்சிகளில் உடனடியாக இறங்குவது தமிழர் தேசத்தின் எதிர்கால இருப்புக்கு பாதுகாப்பானதாக அமையும் என்பதை கூறிவைக்கின்றோம்.



# ஆதிலிங்கேஸ்வரர் ஆலய அழிப்பு ஒரு கேவலமான அரசியல் தந்திரம்

புனிதப்பிரியா பன்னீர்செல்வம்

வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குள் வருகின்ற நெடுங்கேணி எனும் அழகிய விவசாய சிறுநகரின் எல்லைக்கிராமமான பாலமோட்டை - ஒலுமடு கிராமங்களுக்கு அரண்செய்யும் அடர்வனத்துள் எழுந்தருளப்பெற்றிருக்கிறார் அடிமுடி அறியமுடியாத வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர். வெடுக்குநாறி மலை சைவ ஆலயம் சிதைக்கப்பட்டமை சைவ மக்களை பலவந்தமாக வன்முறைக்கு இட்டு செல்லும் நோக்கில் பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட இனவாத அரசியல் என்பது நம் அனைவருக்கும் தௌ;ளத்தெளிவாக தெரிந்ததே. வடொ கிழக்கினை சிங்கள பௌத்தமயமாக்கும் பயங்கரவாத இன அழிப்பு அரசியல்வாதிகள் தமிழர்களின் தேசியத்தை சிதைத்து வேடிக்கை பார்க்கின்றன. தற்போது தொடர்ச்சியாக சைவர்களின் வழிபாட்டுத் தலங்களை சிதைப்பதும் இன அடையாளங்களை உடைப்பதும் கூட ஒரு வகை தீவிரவாதமே என்று பேரினவாதிகளுக்கு புரியவாய்ப்பில்லை. வவுனியா வெடுக்குநாறி மலை சைவ ஆலயம் சிதைக்கப்பட்ட சம்பவத்திற்கு பின்னால் இருக்கும் அரசியல்வாதிகளையும் அரசியலையும் வெளிச்சம் போட்டு காட்டாவிடின் இறுதிகட்ட யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற அழிவை விட பல மடங்கு அதிகமான அழிவை தமிழ் மக்கள் சந்திக்க நேரிடும்.

மொழிசார்ந்த நம்முடைய அடையாளங்களை பாதுகாப்பது எவ்வளவு முக்கியமானதோ ..? அதை விட முக்கியமானது நம்முடைய கலாச்சாரம் சார்ந்த விடயங்களை பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கையளிப்பது. அதற்கானவையே இந்த சைவ கோயில்களும் தமிழ் இனம் சார்ந்த அடையாளங்களும். மேலெழுந்தவாரியாக பார்க்கும் போது ஒரு மலைக்கோவில் இதனாலென்ன வந்து விடப்போகின்றது எனத்தோன்றும் உண்மை நிலை அவ்வாறானது இல்லை. எங்களுடைய கண்ணுக்குத் தெரியாமல் படிப்படியாக தமிழர்களுடைய வழிபாட்டு தலங்கள் பௌத்த மயமாக்கப்பட்ட வண்ணமுள்ளன. பௌத்தர்களின் பழமை வாய்ந்த விகாரைகள் இன்னமும் பாதுகாக்கப்பட்டு ஆங்கு வழிபாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தவண்ணம் தான் காணப்படுகின்றன. அது போல தான் தமிழர்கள் வழிப்பட்டு வரும் பழமை வாய்ந்த சமய வழிபாட்டு தலங்களும் என்பதை இந்த சிங்கள பேரினவாதிகள் எப்போது தான் புரிந்து கொள்வார்கள் என்பது இன்னமும் புரியாத புதிராகவே காணப்படுகின்றது. தொல்லியல் திணைக்களம் என்பது ஒரு நாட்டினுடைய எல்லா பிரஜைகளுக்குமானதாக இருக்க வேண்மே தவிர ஒரு தரப்பினருடைய வரலாற்றை அழித்து இன்னொரு தரப்பினருடைய வரலாற்றை பதிய வைப்பதாக இருக்க கூடாது. இனியும் வடொ கிழக்கில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் வெறுமனே வாய் பேச்சு பேசாமல் பேரினவாதிகளின் இந்த ஈன செயலுக்கு எதிராக ஓரணி திரள வேண்டும்.

பாரம்பரியமாக தமிழ் மக்கள் வழிபட்டுவந்த வெடுக்குநாறி மலை ஆதிசிவன் கோயில் சிங்கள பேரினவாதிகளால் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளது. தமிழ் இனம் நோக்கி ஏவப்பட்ட பல நூற்றாண்டு அடக்குமுறைகளின் இன்றைய வடிவமாகவே இதனை கருத வேண்டும். இயற்கைக்கும் மரபார்ந்த நம் இடங்களுக்கும் எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில்தான் ஆதிசிவன் வழிபாடுகளை மேற்கொண்டு வந்தனர். அவரவர் நம்பும் தொன்மத் தெய்வங்களை அவரவர் நம்பிக்கையின்படி வழிபடும் உரிமை அனைவருக்குமே உண்டு. ஆனால் தமிழர்களாகிய நமக்கு சுதந்திரமான வழிபாட்டு உரிமை கூட இன்று இந்த நாட்டில் மறுக்கப்பட்டிருக்கின்றது. கடந்த காலங்களில் உரிமைசார் வழிபடும் செயற்பாடுகளை மேற்கொண்ட கோயில் நிர்வாகத்தினர் மிக மோசமாகத் தண்டிக்கப்பட்டனர். தொல்லியல் திணைக்களமும் பாதுகாப்பு படையும் இணைந்து மேற்கொண்ட வழக்கு இன்னமும் ஒரு முடிவுக்கு வராமல் நீண்டு கொண்டே செல்;கிறது. வழக்கு தொடரப்பட்ட நாளிலிருந்து எதுவித ஆலய வழிபாடு



களையும் செய்ய முடியவில்லை. வழக்கு தொடரப்பட்ட நாள் தொடக்கம் தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வெடுக்குநாறி மலை ஆதிசிவன் கோயில் தற்போது முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. இச்செயலானது உலகெங்கும் வாழும் மொத்த தமிழர்களையும் உளப்பூர்வமாக பெரும் வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. பேரினவாதிகள் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் அடக்குமுறைகளுக்கே தீர்வு கிட்டாத நிலையில் தமிழ் மக்களின் அடையாளங்களையும் தெய்வங்களையும் அழித்து மகிழ்கின்றனர். பேரினவாதிகளின் இந்த செயற்பாடு தமிழ் மக்களின் வழிப்பாட்டு உரிமையையே கேள்விக்குறியாக்கியுள்ளது. எனவே இந்த உரிமை மறுப்பிற்கு எதிரான நமது குரலை சர்வதேச சமூகத்தின் முன் உரத்துச்சொல்ல வேண்டிய காலம் வந்து விட்டது.

16 ஆம் பக்கத்தில் மிகுதி ...

# தமிழர்கள் மீதான இன அழிப்பின் நீட்சியே ஆதிலிங்கேஸ்வரர் ஆலய அழிப்பு

## தமிழ் தேசிய பண்பாட்டு பேரவை கண்டனம்




வவுனியா நெடுங்கேணிப் பிரதேசத்தில் உள்ள ஒலுமடு கிராமத்தின் வெடுக்குநாறி மலை பகுதியில் அமைந்துள்ள ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் மலை உச்சியில் காணப்பட்ட சிவலிங்கம் அருகிலுள்ள பற்றைக்குள் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் அங்கிருந்த சூலங்கள் மற்றும் அம்மன், பிள்ளையார் சிலைகளும் காணாமலாக்கப்பட்டு சிவன் ஆலயம் முற்றாக சிங்கள பேரினவாதிகளால் அழிக்கப்பட்டுள்ளமை கண்டனத்துக்குரியது.

தமிழ் தேசிய பண்பாட்டு பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பல வருடங்களாக சிங்கள பேரினவாதிகள் தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழர்களின் இன,மத அடையாளங்களை முழுவதுமாக அழிக்கும் செயற்பாடுகளை அரச இயந்திரத்தின் உதவிகளுடன் திட்டமிட்டு அரங்கேற்றுகின்றது.

மேலும் இவ்வாறான தமிழின அழிப்பு செயற்பாடுகளுக்குப் பின்னால் பௌத்த மகாசங்க பேரினவாத சக்திகள், தொல்பொருள் திணைக்களம், சிறிலங்கா இராணுவம் மேலும் பல அரச இயந்திரங்கள் நேரடியாகவே இத்தகைய செயற்பாடுகளில் ஈடுப்பட்டு வருகின்றது. சிறிலங்கா அரசின் இந்த இனவாத செயல்களை ஒட்டுமொத்த தமிழர்களாகிய நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

மேலும் ராஜபக்ச அரசாங்கம், கோட்டா அரசாங்கம் என வழிவந்த ரணில் அரசாங்கமும் மீண்டும் தமிழ் மக்களை வேரோடு அழிப்பதற்கு கங்கணம் கட்டி விட்டது. சிங்கள பேரினவாதம் இந்த செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தவில்லை எனில் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரிக்கின்றோம். தொடர்ந்தும் சிங்கள பேரினவாதம் தமிழினத்தின் மீது தொடுக்கும் அராஜக செயல்களை தடுத்து நிறுத்துவதற்கு ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் ஆதரவு தேவைப்படுகின்றது.

மேலும் கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களத்தினர் குறித்த ஆலயத்திற்கு மக்கள் சென்று வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டாம் என்று தடை விதித்து வந்தநிலையில் பிரதேச மக்களின் நெருக்கடி மற்றும் போராட்டம் கொண்ட முயற்சியினால் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவ்வாறிருக்கையில் தான் சிங்கள பேரினவாத அரசு இவ் ஆலயத்தை முழுவதுமாக அழித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கச்சதீவில் புத்தர்சிலை; அரச அதிபருக்கு யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் முறைப்பாடு

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தில் புத்தர் சிலைகள் அமைக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க கோரி யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் யாழ்ப்பாண மாவட்ட செயலரை வலியுறுத்தியுள்ளார்.

யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம் இந்த கோரிக்கையை யாழ்ப்பாண மாவட்ட செயலருக்கு கடிதம் மூலம் விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில், புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்துள்ள கச்சதீவில் புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அரச மரங்கள் நாட்டப்பட்டுள்ளதாகவும் நம்பகரமான செய்திகள் எமக்குக் கிடைத்துள்ளன. இதுபற்றி ஊடகங்களில் செய்திகளும் விமர்சனங்களும் வந்துகொண்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம்.

எனவே இதனைத் தங்கள் கவனத்துக்கு கொண்டுவரும் நாம் இது பற்றி ஆராய்ந்து முறையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய பக்தர்களும் இலங்கை பக்தர்களும் சமத்துவமாக ஒன்று கூடி வழிபட்டுச் செல்கின்ற கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் தனித்துவத்துக்கு அங்கு அமைக்கப்பட்டுள்ள புத்தர் பெருமானின் சிலைகள், மற்றும் நாட்டப்பட்டுள்ள அரச மரங்கள் என்பன பாதிப்பை ஏற்படுத்துவதோடு இரு நாட்டு நட்புக்கும் பங்கம் ஏற்படவும் இவை வழிவகுக்கும் என்பதையிட்டு நாம் கவலையடைகிறோம்.

அத்துடன் கச்சதீவில் புனித அந்தோனியார் திருத்தலத்தைத் தவிர வேறெந்த அடையாளங்களோ, கட்டமைப்புக்களோ அமையக்கூடாது என்ற பாரம்பரியமும் மீறப்பட இப்படியான மத செயற்பாடுகள் வழிவகுத்து எதிர்காலத்தில் பல சிக்கல்கள் உருவாக ஏதுவாகும் என்பதையும் குறிப்பட விரும்புகிறோம்.

எனவே, இவ்விடயத்தில் தாங்கள் மிகுந்த கவனமெடுத்து கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

## யாழ்.நாவலர் மண்டபத்தின் பொறுப்புக்கள் கலாசார திணைக்களத்திற்கு கைமாறின

யாழ் நல்லூர் நாவலர் மண்டபத்தின் செயற்பாடுகள் எவ்வித இடையூறும் இன்றி புனிதத்தன்மை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா இந்து சமயம் மற்றும் கலாச்சார திணைக்கப் பணிப்பாளர் அனிருதனனுக்கு எழுத்து மூலமான நிபந்தனைகளுடன் பணிப்புரைக் கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது,

இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் சமய மற்றும் ஆன்மீக நடவடிக்கைகள் நாவலர் கலாசாரத்தில் எவ்வித இடையூறும் இன்றி நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மண்டபத்தின் பின்வரும் செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

நாவலர் மண்டபத்தின் சமய மற்றும் ஆன்மிக நடவடிக்கைகளுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமே முழுப் பொறுப்பாக இருக்க வேண்டும்.

நாவலர் கலாசார மண்டபம் புனிதமாக பாதுகாக்கப்படுவதோடு நடவடிக்கைகளுக்காக மாகாண கலாச்சார திணைக்களத்துடன் ஒத்துழைத்தல். நாவலர் நினைவுப் பொது நூலகத்தை யாழ்ப்பாண மாநகர சபையால் பராமரிக்க முடிவதோடு அதற்கான நியாயப்படுத்தல்கள் மற்றும் தொடர்வதற்கு ஒப்புதலை பெறுவதோடு பொறுப்பு வாய்ந்த இரு தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாக்கப்பட வேண்டும் போன்ற நிபந்தனைகள் ஆளுநரால் வழங்கப்பட்டுள்ளது.

## வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழ் உள்ள காணியும் பறி போகிறது

### ஆளுநர் நடவடிக்கை!

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழ் உள்ள 65 ஏக்கர் வவுனியா விவசாய பண்ணை காணியையும் மத்திய அரசின் கீழ் கொண்டு வரும் வகையில் ஆளுநர் கடிதம் அனுப்பியுள்ளார்.

வவுனியா - ஏ9 வீதி, தாண்டிக்குளத்தில் விவசாய கல்லூரிக்கு அண்மித்ததாக விவசாயபண்ணை காணப்படுகின்றது.

குறித்த விவசாய பண்ணையானது 65 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளதுடன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஆளுகையின் கீழ் உள்ளது.

இந்நிலையில், அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகக் குறித்த வடக்கு மாகாண விவசாய அமைச்சின் காணியை மத்திய அரசின் கீழ் செயற்படும் பிரதேச செயலாளரிடம் கையளிக்குமாறு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**குறித்த விவசாய பண்ணையானது 65 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளதுடன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஆளுகையின் கீழ் உள்ளது.**

விவசாய பண்ணை அமைப்பதற்கு ஓமந்தையில் 100 ஏக்கர் காணி வழங்கப்படும் எனவும் குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண சபை இயங்கிய போது வவுனியா பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்குக் குறித்த காணியைக் கோரியது.

இதன்போது மாகாணசபை இக்காணியை விடுவிக்க மறுத்திருந்த நிலையில், பொருளாதார மத்திய நிலையம் மதவுவைத்தகுளத்தில் அமைக்கப்பட்டுப் பல வருடங்களாக பூட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வடமாகாண ஆளுநரிற்கு ஜனாதிபதி வழங்கிய மேலதிக அதிகாரங்கள்

வட மாகாண அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு இணை தலைவராக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வட மாகாணத்தில் புதிய நியமனங்கள் ஏற்கனவே வட மாகாணத்தில் உள்ள மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவராக அமைச்சர் காதர் மஸ்தானும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வவுனியா மாவட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனும் நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்களை ஒருங்கிணைக்கும் வகையில் இணைத் தலைவராக வடக்கு ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

# ‘ஜனநாயகம் மறுக்கப்பட்டால் மக்கள் உரிமைகளை உறுதிப்படுத்த முனைவார்கள்’

தேர்தல்களை பிற்போட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளில் கைவைத்தால் மக்கள் தமது உரிமைகளை உறுதிப்படுத்த முனைவார்கள் என்பதை ஜனாதிபதி சிந்தித்து செயற்படவேண்டும் என மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.




மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் பிரதேச அபிவிருத்திக்குழு தலைவர் பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டங்களை நடாத்தாது மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டங்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் முன்னெடுத்துவருகின்றார்.

பொதுமக்களின் நன்மைகருதியில்லாமல் அவர் காணி ஏதாவது விற்பனை செய்வதற்கே அவசரமாக மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தினை கூட்டுவதற்கு நடவடிக்கைகளைமுன்னெடுத்துவருகின்றார்.

# ஆசிரியர் பற்றாக்குறைக்கு மிக விரைவில் தீர்வு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவ.சந்திரகாந்தன் தலைமையில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், மாவட்டத்தில் உள்ள வலயக் கல்வி அலுவலகங்களின் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்வி அலுவலகங்களின் திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் பிரத்தியேக செயலாளர் த.தஜிவரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு, தமது கருத்துகளையும், பிரச்சினைகளையும் முன்வைத்தனர்.

இதன்போது மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பாதகமாக காணப்படும் கணித, விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

அத்துடன், கல்வித்துறை சார் திணைக்கள அதிகாரிகளிடம் விடயம் தொடர்பாக கேட்டறிந்து கொண்ட இராஜாங்க அமைச்சர், கல்வி அமைச்சின் ஊடாக இந்தப் பிரச்சினைக்கான தீர்வை மிக விரைவாக பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார்.

## இலங்கையில் இளம் பொருளியல்
# பேராசிரியராக தமிழர் பதவியுயர்வு

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் கற்கைஅலகின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. கணேஸ் சுரேசுக்கு பொருளியல் பேராசிரியர் பதவி உயர்விற்கான அங்கிகாரம் பல்கலைக்கழக பேரவையினால் வழங்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை மற்றும் மதிப்பீட்டிற்கு அமைய இதற்கான அங்கிகாரம் வழங்கப்பட்டது.

கலாநிதி. கணேஸ் சுரேஸ் இலங்கையில் உள்ள பொருளியல் பாட பேராசிரியர்களுக்குள் இளவயதுப் பேராசிரியர் என்பதுடன் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் இளவயதுப் பேராசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



இவர் தனது கலாநிதி கற்கை நெறியை அவுஸ்திரேலியாவிலுள்ள குயின்ஸ்லாந்து தொழிநுட்ப பல்கலைக்கழகத்திலும், முதுமானிக் கற்கைநெறியினை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் தனது இளமானிப் பொருளியல் சிறப்புக் கற்கை நெறியினை கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்திருந்தார்.

இவர் தனது கலாநிதி கற்கை நெறிக்கான ஆய்வினை சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொண்டிருந்தார்.

இவர் தனது ஆராய்ச்சிகளை உலகத்தரம் வாய்ந்த ஆய்வுச் சஞ்சிகைகளில் வெளியிட்டுள்ளார்.

மேலும் இவர் கனடா, அவுஸ்திரேலியா, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், பங்களாதேஸ், இந்தியா போன்ற நாடுகளில் ஆய்வுக் கருத்தரங்குகளிலும் பங்கேற்றுள்ளார்.

# 14 ஆயிரம் குடும்பங்களுக்கு அரிசி பகிர்ந்தளிப்பு!







அரசின் புதிய எழுச்சி திட்டத்திற்கமைய புதுவருடத்தையொட்டி களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் வருமானம் குறைந்த சுமார் 14ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 10கிலோ அரிசி இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் 2022/2023பெரும்போக நெல் கொள்வனவு மற்றும் அரிசி விநியோக தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரிசி விநியோகம் மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்றது.

2022/2023 பெரும்போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு செய்தல் மற்றும் நெல் கையிருப்பினை அரிசியாக்கல் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி அடையாளம் காணப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிகழ்வு களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஜனாதிபதி பங்கேற்புடனான தேசிய நிகழ்விற்கு சமாந்தரமானதாக உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 13429 குடும்பங்கள் இத் திட்டத்தில் பயனடைய உள்ளனர்.

# சம்பூரில் சூரிய சக்தி மின் நிலையத்தை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம்

திருகோணமலை சம்பூரில் இலங்கை மின்சார சபை மற்றும் இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனம் இணைந்து சூரிய மின்சக்தி நிலையத்தை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சம்பூர் அனல் நிலையம் நிர்மாணிக்கப்படவிருந்த அதே இடத்தில் 135 மெகாவோட் சூரிய சக்தி திட்டத்தை 2 கட்டங்களாக நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, 42.5 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் 50 மெகாவோட் சூரிய மின்சக்தித் திட்டம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த கட்டத்தை 2024 முதல் 2025 வரை 2 ஆண்டுகளில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக, 72 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் மேலதிகமாக 85 மெகாவோட் திறன் கொண்ட சூரிய மின் கட்டமை நிர்மாணிக்கப்படவுள்ளது.



இரண்டு கட்டங்களின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை விநியோகிப்பதற்காக 42 மில்லியன் டொலர் செலவில் கப்பல்துறையிலிருந்து ஹபரணை வரை 220 கிலோவோட் திறன் கொண்ட 76 கிலோமீற்றர் நீளமான விநியோக கட்டமைப்பு அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த திட்டத்துக்கான ஒப்பந்தம் கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி கைச்சாத்தானது.

திகரித்து வரும் மின் தேவையை சமாளிக்கும் வகையில், திருகோணமலை, சம்பூர்பகுதியில் புதிய அனல் மின் நிலையம் அமைக்க இந்தியா - இலங்கை அரசாங்கங்களிடையே 2011 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

எனினும், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்த நிலையில், அந்த இடத்தில் சூரிய மின் உற்பத்தியை மேற்கொள்ளும் வகையில் மாற்றி அமைக்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.







பெரியகல்லாறு ஸ்ரீ சர்வார்த்த சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த பிரமோற்ஷப பெருவிழா, கடந்த 22ந்திகதி வைபவ ரீதியாக கிழக்கின் பிரசித்திபெற்ற கடலம்மன் அலயத்திலிருந்து ஆலய பிரதம குரு சிவாகமரெத்னா சிவஸ்ரீ இரா.கு.நடேசடுணஸ்காந்த குருக்களினால் ஆரம்ப பூசை நடாத்தப்பட்டு ஆலய வண்ணக்கர் நே.கமல்ராஜ் சிரசில் திருக்கொடி சீலை குருவால் வைக்கப்பட்டு மங்கலவாத்தியம் முழங்க ஆலயத்திற்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டதைக் காணலாம்.

## வெடுக்குநாறி மலை விக்கிரகங்கள் உடைப்பு:

# மட்டக்களப்பு பல்சமய ஒன்றியம் விசனம்

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் சமயத்தின் பெயரால் ஏற்பட்டிருக்கும் முரண்பாடான சூழல் மற்றும் வெடுக்குநாறி மலையில் பிடுங்கி எறியப்பட்ட சைவசமய விக்கிரகங்கள் உடைப்பு குறித்தும் நாம் ஆழ்ந்த கவலையடைகிறோம் என மட்டக்களப்பு பல்சமய ஒன்றியம் விசனம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளனர்.

மேலும் தெரிவிக்கையில், பல தனித்துவங்களுடனும் மகத்துவங்களுடனும் சிறப்புற விளங்கும் எமது மாவட்டத்தில் நாம் காலங்காலாக சமய சமூக இன ஒருமைப்பாட்டுடனும் சகோதரத்துவத்துடனும் ஒரு தாய் மக்களாகவே வாழ்ந்து வருகிறோம்.

நம்மிடையே பல சமயம்சார் நம்பிக்கை உடையர்களும் சமய மரபுகளைப் பின்பற்றுவர்களும் வாழ்ந்து வருகின்றனர்.

இருப்பினும் சமய நம்பிக்கையினை பின்பற்றுகிறவர்களை ஏனைய சமய நம்பிக்கையுடையவர்கள் மதித்து ஐக்கியத்துடனும் சகோரத்துவத்துவத்துடனும் நடந்துள்ள வேண்டும்.

அவ்வப்போது சில தீயசக்திகளும் சமூக விரோதிகளும் சமய உராய்வுகளை பேதங்களை உருவாக்கி இதுனூடாக எமது சமுகத்தை பிளவுபடுத்தவும் குழப்பங்களை வன்முறைகளை மோதல்களை ஏற்படுத்த முயற்சித்த போதும் அவை பெரிதளவில் வெற்றியளிக்காமல் போயிக்கின்றன.

சமயம் என்பது ஒவ்வொரு தனிமனிதனதும் சுயாதீனமானதும், சுதந்திரமானதும் தேர்வு மற்றும் நம்பிக்கை ஆகும்.

இந்நாட்டில் நாம் கடந்த எழுபத்தைந்து ஆண்டு காலமாக இன முரண்பாடு ஒடுக்குமுறையினாலும் முப்பதாண்டுகள் போரினாலும் மிக மோசமாக பாதிக்கப்பட்டு எண்ணிலடங்காத பேரழிவுகளையும் கண்டுள்ளோம்.

இவற்றிலிருந்து மீளெழ முயற்சிக்கும் எம் மக்களின் வாழ்வில் தற்போதய பொருளாதார நெருக்கடி, போதைப்பொருள் பாவனை என்பவற்றை முகங்கொடுக்கின்றது என தெரிவித்துள்ளார்.



# கேக் பிரியர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் கேக்களை கொள்வனவு செய்யவேண்டாம் என மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

அகில இலங்கை சிற்றுண்டி உரிமையாளர்கள் சங்கத்தினரால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய குறித்த விடயம் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத்,

கொழும்பு துறைமுகத்துக்கு வந்த திரவ முட்டைகள் சுமார் ஏழு நாட்களாக விடுவிக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அவை பழுதடைந்திருக்கலாம் என்ற அடிப்படையில், எதிர்வரும் புத்தாண்டுக்கு இந்த முட்டைகளை பயன்படுத்தி கேக் தயாரிக்க வேண்டாம் என்று வெதுப்பக உரிமையாளர்களிடம் அசேல சம்பத் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த இறக்குமதி மூலம் சுங்க திணைக்களம் ஏற்றுமதி - இறக்குமதி சட்டத்தை மீறியுள்ளது.

எனவே பொது சுகாதார ஆய்வாளர்கள் துறைமுகத்திற்குச் சென்று முட்டைகளின் நிலையை பரீட்சிக்க வேண்டும். என தெரிவித்துள்ளார்.

# ஏதிலிகளாக பதிவு செய்யப்படாத ஈழத்தமிழர்கள்! மத்திய அரசிடம் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை

பொருளாதார நெருக்கடியால் தமிழகம் சென்ற 225 ஈழத்தமிழர்கள் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டு ஓராண்டாகியும் அவர்கள் ஏதிலிகளாக பதிவு செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் தொடங்கியதிலிருந்து ஏதிலிகளாக வர தொடங்கிய ஈழத்தமிழர்கள் தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில் உள்ள 108 மறுவாழ்வு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி 19,316 குடும்பங்களைச் சேர்ந்த 58,492 பேர் இந்த முகாம்களில் தங்கியுள்ளனர். இந்த முகாம்களின்; குடும்பத் தலைவருக்கு மாதம் 1,500, 12 வயதுக்கு மேல் உள்ளோருக்கு 1000 ரூபா, 12 வயதுக்கு கீழ் உள்ளோருக்கு 500 ரூபா உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இதனை தவிர வருடாந்த கல்வி உதவி, வீடு, மின்சாரம் உட்பட்ட குடும்பத்துக்கு மாதம் 20கிலோ இலவச அரிசி, மானிய விலையில் அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலை கடைகள் மூலம் வழங்கப்படுகின்றன. அவர்கள் வெளியே கூலி வேலைக்குச் சென்றுவிட்டு மாலையில் முகாம்களுக்கு திரும்பவும் அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆனால், 2012-ம் ஆண்டுக்கு பிறகு ஏதிலிகளாக வருவோரை பொலிஸார் கைது செய்து புழல் சிறையில் தடுத்து வைத்தனர். இந்த நிலையில், இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் 23.3.2022 முதல் தனுஷ்கோடிக்கு வந்த 225 ஈழத் தமிழர்கள் கைது செய்யப்படாமல் மனிதாபிமான அடிப்படையில் மண்டபம் முகாமில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு அரசால் ஏதிலிகளுக்கு வழங்கப்படக்கூடிய உதவித்தொகை எதுவும் வழங்கப்படுவதில்லை. மேலும் தமிழக அரசு மத்திய அரசிடம் தற்போது ஏதிலிகளாக வந்துள்ள ஈழத்தமிழர்களை எப்படி கருதலாம் என கருத்துக்கேட்டு மத்திய அரசின் முடிவுக்காக கடந்த ஓராண்டாக காத்திருக்கிறது.

இந்த நிலையில் தற்போது இந்தியாவுக்கு வரும் ஈழத்தமிழர்களை ஏதிலிகளாக பதிவு செய்து ஏற்கெனவே தமிழக முகாம்களில் வசிப்போருக்கு வழங்கப்படும் சலுகைகளை வழங்க வேண்டும். இதற்கு தமிழக அரசு உடனடியாக பிரதமரையும், மத்திய அரசையும் வலியுறுத்த வேண்டும் என்பதே மண்டபம் முகாமில் வசித்து வரும் ஈழத்தமிழர்களின் கோரிக்கையாக உள்ளது என்று தமிழக செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

## விமான நிலையத்தில்

# இந்தி, சீன மொழிகள்

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இந்தி, சீன மொழிகளிலும் தற்போது பெயர் பலகைகள் காணப்படுகின்றன.

விமான நிலையத்தில் ஒவ்வொரு பிரிவையும் சுட்டிக்காட்டும் வகையில் பெயர்ப் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப் பலகைகளில் இத்தனை காலமும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளே காணப்பட்டன.

ஆனால் திடீரென அண்மைய நாட்களாக மேற்குறிப்பிட்ட மூன்று மொழிகளுடனும் சேர்ந்து இந்திய, சீன மொழிகளிலும் மின்சாரத்தில் ஓடிக்கொண்டிருக்கும் பெயர் பலகைகளை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஏற்கனவே கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தைப் பிரதேசங்களில் உள்ள சில வீதிகள், மிகப் பெரிய கட்டட நிர்மாணப் பணிகள் மற்றும் சீன விடுதிகள் போன்றவற்றில் உள்ள பெயர் பலகைகள் தனிச் சீன மொழிகளில் மாத்திரம் உள்ளமை தெரிந்த கதை.

விசேடமாக அதுவும் அம்பாந்தோட்டையில் தனிச் சீன மொழி தான் காணப்படுகின்றது. ஆனால் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சீன மொழியில் பெயர் பலகைகள் இருக்கவில்லை.

கொழும்பில் இந்தியத் தூதரகத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும் இந்தி மொழியில் பெயர் பலகைகள் இருந்ததாக தகவல்களும் இல்லை. ஆனால் முதன் முறையாக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இந்தி, சீன மொழிகளில் பெயர் பலகைகள் இருப்பதை தற்போது அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான நிலையில், இந்தியாவும் சீனாவும் இலங்கைத்தீவில் ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் பொருளாதார ரீதியில் எப்படிச் செயற்படுகின்றன என்பதை இந்த பெயர்ப் பலகை மூலம் தற்போது தெட்டத் தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இந்திய ரூபாய்களை இலங்கையில் பயன்படுத்தலாம் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்ததாகச் செய்திகள் வெளியான நாளில் இந்தி மொழி பெயர் பலகை சிறிலங்கா விமான நிலையத்தில் வந்ததா?

அப்படியானால் ஏன் சீன மொழியும் அந்தப் பெயர் பலகைகளில் இணைந்தது? இந்த இரண்டு கேள்விகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திடமே பதில் இருக்குமா என்பதும் சந்தேகமே.

ஆகவே இந்தப் பெயர் பலகைகள் பற்றி மேலதிக விமர்சனங்கள் தேவையில்லை எனவும் தெரிகின்றது. 2009 இற்குப் பின்னரான சூழலில் அதுவும் 2015 இற்குப் பின்னர் இது புரியாத புதிர் அல்ல.

ஆனால் எங்களைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதைப் பற்றி அறிந்துகொள்வது தான் செய்தியின் முக்கிய நோக்கம். இது தொடர்பில் எதிர்வரும் நாட்களில், இந்தியர்களும், சீனர்களும் இதன்வழியே கூடுதலாக பயணம் செய்கிறார்கள் ஆகவே தான் இங்கு இந்தியிலும் சீன மொழியிலும் பெயர்ப்பலகை வைக்கப்பட்டது எனவும் சிறிலங்கா அரசாங்கம் பதிலளித்தாலும் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை.

ஒருவேளை, தற்போது இலங்கை, பொருளாதார நெருக்கடிச் சூழலில் இருப்பதால் தான் விமான நிலையத்தில் இந்தி, சீன மொழிகளிலும் பெயர்ப் பலகைகள் வந்திருக்க வேண்டும் என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

எனவே இதற்குப் பின்னால் அரசியல் உள்ளது என்பதைத் தாண்டி பொருளாதாரம் தான் உள்ளது என்றும் நோக்கலாம். ஆகவே இந்த செய்தி, இலங்கைத்தீவின் எதிர்காலம் குறித்து ஒவ்வொருவருக்கும் உணர்த்தியிருக்கும். குறிப்பாகத் தமிழர்கள் இதனை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

இருப்பினும், தற்போதைய சிறிலங்கா அதிபர் ரணில் விக்ரமசிங்க 2017 ஆம் ஆண்டு, பிரதமராக இருந்த போது, கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சில இடங்களில் வைக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகைகளில் இந்தி மொழி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சவேந்திர சில்வாவிற்கு ஏற்பட்டுள்ள சிக்கல்



முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தொடர்ந்தும் இராணுவப் பிரதானியாக நீடிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பேச்சாளர் ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மீது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கடும் அதிருப்தியில் இருப்பதால் அவரை பதவியில் இருந்து நீக்குவது தொடர்பில் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் பிரதான கட்சி என்ற வகையில் பொதுஜன பெரமுன விசேட கலந்துரையாடலை மேற்கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரைவில் முடிவெடுக்கும் வகையில் செயற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆளுநர் என்ற எலும்புத்துண்டுக்காக

# தமிழினத்தை விற்காதே

யாழ் மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட நாவலர் கலாசார மண்டபம் வட மாகாண ஆளுரினால் மத்திய அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்றலில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

ஆளுநர் என்ற எலும்புத்துண்டுக்காக தமிழினத்தை விற்காதே, ஜீவன் தியாக



ராஜாவே உனக்கு மனசாட்சி இல்லையா போன்ற கோஷங்களை எழுப்பியவாறு போராட்டம் இடம்பெற்றது.



# தீர்வு கிடைக்காத மட்டக்களப்பு மேய்ச்சல்தரை விவகாரம்

புனிதப்ரியா பன்னீர்செல்வம்







1974 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு மாதவணை ஆகிய பிரதேசங்கள் மேய்ச்சல் தரையாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. போர் முடிந்தகையோடு 2008 -2009 இல் அத்துமீறிய குடியேற்ற சம்பவங்கள் இங்கு இடம்பெற்றபோது அவர்களை தடுப்பதற்கு எவரும் இல்லை. இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட கால்நடைகளை மேய்க்க மேய்ச்சல் தரை இன்றி அல்லலுறும் வேளையில் மட்டக்களப்பு மயிலந்தனைமடு மாதந்தனை மேய்ச்சல்தரை பகுதி சிங்கள மயப்படுத்தப்பட்டு வருகின்றது. யுத்தம் நிறைவடைந்த பின்னர் பேரினவாத அரசாங்கம் வடொ கிழக்கு பகுதியில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்டு வருவதால் தமிழ் மக்களின் வாழ்வு மிகவும் கேள்விக்குறியான நிலையில் உள்ளது. நாட்டின் பல பகுதிகளில் காலம் காலமாக இருந்த வந்த தமிழ் மக்களின் இன அடையாளங்கள பேரினவாத அரசாங்கம் அழித்து அந்த இடங்களிலே புத்தர் சிலைகளை நிறுவி வருகின்றமையினால் மக்கள் மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் அரசாங்கம் இது மாதிரியான செயற்திட்டங்களை மேற்கொள்வது கண்டனத்திற்குரிய விடயமாகும். அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் நலன் என்று அவர்களுக்காக பல்வேறு சந்தர்ப்பங்களிலும் குரலெழுப்பி வந்தாலும் அதனால் எந்தவொரு பயனும் இல்லை. பேரினவாத அரசாங்கம் தமிழ் அரசியல்வாதிகளின் வாய்களை அடைத்து விட்டு தனது இனவாத அரசியலை தீவிரமாக்கியுள்ளது.

யுத்தம் முடிவுற்று நாட்டில் ஏற்பட்ட சமாதான சு10ழ்நிலையைத் தொடர்ந்து மக்கள் யுத்த காலத்தில் குடியிருந்த பகுதிகளில் மீண்டும் மீள்குடியேறி அவர்களது கால்நடைகள் மற்றும் விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் கால்நடைகளை வளர்த்து வரும் நிலையில் திடீரென்று அப்பகுதியில் சிங்களவர்களை குடியேற்றி வருகின்றனர். இதனால் மக்களது கால்நடைகளை வளர்ப்பதிலும் கால்நடைகளுக்கு உணவு வழங்குவதிலும் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மேய்ச்சல் தரைக்குரிய காணிகள் இல்லாமல் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேய்ச்சல் தரை இன்மை காரணமாக நாளுக்கு நாள் கால்நடைகள் உயிரிழந்து கொண்டு வருகின்றன. கால்நடை மற்றும் விவசாயத்தையே ஜீவனோபாய தொழிலாக நம்பி வாழும் மக்கள் இந்த பேரினவாத அரசின் தன்னிச்சை செயற்பாட்டின் காரணமாக பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றமை குறித்து நாம் நாள்தோறும் ஊடகங்களின் ஊடாக அறிந்து கொண்டு தான் வருகின்றோம். இந்த மக்கள் பல இன்னல்களை அனுபவித்து கால்நடைகளை வளர்த்து வருகின்றார்கள். இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலமே அவர்களது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை மற்றும் பிள்ளைகளின் வாழ்க்கையை நம்பி இருக்கின்றார்கள். ஆனால் தொடர்ச்சியாக அவர்களது கால்நடைகள் உயிரிழந்து வருவதால்; பாரிய கஷ்டங்களுக்கு மத்தியில் அப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பால் விற்பனை மூலமும் வருமானம் ஈட்ட முடியாமல் அல்லலுறுகின்றனர்.

கிழக்கு மாகாண ஆளுநருடைய வழிகாட்டலின் கீழ் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாயவின் காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் காணி அபகரிப்பொன்றை மேற்கொள்ளும் முகமாக தொடங்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தை தற்பொழுதும் பேரினவாதிகள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இதனுடைய நோக்கம். கிழக்கு மாகாணத்தில் இருக்கும் இன விகிதாசாரத்தினைமாற்றுவது தான். பல்வேறு காணி அபகரிப்புத்திட்டத்தின் ஊடாக அது கடந்த 70 வருடங்களாக நடந்து வந்த ஒருவிடயம். கோட்டாவினுடைய காலப்பகுதியில் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்

08 ஆம் பக்கத்தில் மிகுதி ...

**கிழக்கு மாகாண ஆளுநருடைய வழிகாட்டலின் கீழ் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாயவின் காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் காணி அபகரிப்பொன்றை மேற்கொள்ளும் முகமாக தொடங்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தை தற்பொழுதும் பேரினவாதிகள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இதனுடைய நோக்கம். கிழக்கு மாகாணத்தில் இருக்கும் இன விகிதாசாரத்தினைமாற்றுவது தான்.**

**பல்வேறு காணி அபகரிப்புத்திட்டத்தின் ஊடாக அது கடந்த 70 வருடங்களாக நடந்து வந்த ஒருவிடயம். கோட்டாவினுடைய காலப்பகுதியில் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களால் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் கூட செய்யப்பட்டது. ஆனால் மக்களின் வாழ்வு நிலை தினம் தினம் போராட்டமாகவே காணப்பட்டு வருகின்றது.**





# தீர்வு கிடைக்காத மட்டக்களப்பு மேய்ச்சல்தரை விவகாரம்

களால் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் கூட செய்யப்பட்டது. ஆனால் மக்களின் வாழ்வு நிலை தினம் தினம் போராட்டமாகவே காணப்பட்டு வருகின்றது. ஆனால் காணி அபகரிப்பு நடைபெற்றாலும் தங்களது பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மாவட்டச் செயலாளரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் இதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமலிருப்பது தான் கவலையான விடயம். பாரம்பரியமாக மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தப்பட்டு வரும் இப்பிரதேசம் வருடா வருடம் விவசாய ஆரம்பக்கூட்டங்களில் மேய்ச்சல் தரையாக அறிவிக்கப்படுகின்றது. ஆனால் அங்கு மாடுகளைப் பராமரிப்பதில் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். அதனால் நாட்டுக்கு கணிசமான அளவில் பாலுற்பத்தியை வழங்க முடியாத நிலைக்கு மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்கள் தள்ளப்படுகின்றனர். எனவே மேய்ச்சல் தரை தெடர்பில் அரசாங்க அதிகாரிகள் விரைவானொ இறுக்கமான செயற்பாடு ஒன்றினை முன்னெடுக்கவேண்டும். இப்பிரச்சினை குறித்து மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசசார் பிரதிநிதிகள் கவனம் கொள்வதாகத் தெரியவில்லை. அதேநேரத்தில் அரச அதிகாரிகள் இவ் விவகாரத்தில் சறுக்கல் போக்கையும் மழுப்பல் நடைமுறையையுமே கைக்கொள்ள முயல்கின்றனர். இதனால் பாதிக்கப்படுவது மாவட்டத்தின் பண்ணை வளர்ப்பாளர்களேயாகும். மட்டக்களப்பு மாவட்டம் மிகப்பிரதானமான விவசாயம் பண்ணை வளர்ப்பு மீன்பிடி போன்ற துறைகளிலிருந்தே அதிகபொருளாதாரத்தைப் பெறுகிறது. அதில் ஏற்படும் பிரச்சினைகள் சரியான முறையில் அணுகப்பட வேண்டும். தீர்வுக்குட்படுத்தப்படவேண்டும்.

மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைப் பிரதேசமான மயிலந்தனைமடு பெரிய மாதந்தனை பிரதேசத்தில் மேய்ச்சல்தரை பகுதியில் கால்நடை பண்ணையாளர்களை அச்சுறுத்தி மாடுகளை வெட்டி அவர்களை பரம்பரையான மேய்ச்சல்தரையில் இருந்து ஓடவைப்பதற்காக முழுமூச்சிலான திட்டத்தை சிங்கள பேரினவாதிகள் தீவிரப்படுத்தியுள்ளனர். பண்ணையாளர்களின் இந்த பிரச்சனைகளை அவர்கள் பல இடங்களில் முறையிட்டுள்ளனர். ஆனால் எந்த ஒரு இடத்திலும் அவர்களுக்கு முடிவு இல்லாமல் தொடர்ச்சியாக அவர்களின் வாழ்வே கேள்விக்குறியாகின்ற நிலையில் தான் தற்போது இருக்கின்றது. மாதுறு ஓயா வலதுகரையை சிங்கள மயமாக்குதலுக்கான நோக்கத்தோடு இந்த பண்ணையாளருக்கு எதிராக நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்பது இந்த பேரினவாதிகளின் செயற்பாடுகளின் மூலம் நன்றாக விளங்குகின்றது. இந்த பிரதேசத்தில் தமிழ் விரோத நடவடிக்கை சிங்கள விரோதிகளால் முன்னெடுப்பதை தடுக்க ஒருவருடத்துக்கு மேலாக மக்கள் பல்வேறு வழிகளிலும் போராடி வருகின்றனர். போராடி தான் மக்கள் தமது உரிமைகளை பெற்று கொள்ள வேண்டும் என்றால் மக்கள் பிரதிநிதிகள் என்று அரசியல் கைக்கூலிகள் ஊருக்கு ஊர் தேவையில்லையே. தமிழ் பிரதேசத்தை இன சுத்திகரிப்பு நடாத்துவதற்கும் சிங்கள குடியேற்றத்தை நடாத்தி இங்




குள்ள மக்களை பட்டினியில் சாவடிக்கவுமே இந்த இனவாத அரசு இங்கணம் செயற்பட்டு வருகின்றது என்பது தௌ;ளத்தெளிவாக தெரிகின்றது. மாதுறுஓயா இந்த திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடுகளை செய்யும் சர்வதேச நிதி நிறுவனங்கள் சற்று இந்த மக்களின் வறுமை நிலை குறித்து சிந்தித்து செயற்பட்டால் நல்லது தான். ஆனால் அது எங்கணம் சாத்தியம் என்பது கேள்விக்குறியே?.

சிங்கள இனவாத சித்தாந்தத்திற்கு விலைபோவதை சமூக பொறுப்புள்ள ஒவ்வொருவரும் கரம் கோர்த்து தடுத்து நிறுத்த முன் வர வேண்டும். அல்லது சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு முன்னால் நாங்கள் போராட்டங்களை செய்வதை தவிர மக்கள் தமக்கான நீதியை பெற்று கொள்ள வேறு வழியில்லை. இனவாத தமிழ்விரோத செயற்பாடுகள் அனைத்தும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்பது தான் இன்று நம் நாட்டில் யதார்த்தம். தமிழ் மக்களை அப்புறப்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை இல்லாமல் செய்து ஒரு இனவழிப்பிற்கு வழிவகுக்கின்ற இந்த செயற்பாட்டிற்கு ஒருபோதும் இடமழிக்க கூடாது. இங்கே பரம்பரையாக இருக்ககூடிய தமிழர் தாயகத்தில் இருக்ககூடிய உண்மையான சொந்தகாரர்களுக்கு நீதிகிடைக்கவேண்டும். இந்த மக்கள் தங்களுக்கு பல அச்சுறுத்தல் மத்தியில் இந்த பிரதேசத்தில் தங்களுடைய உயிர்களை வைத்துக் கொண்டு பண்ணைகளை பராமரிப்பதென்பது ஒரு இலகுவான விடயமல்ல. ஒருபக்கம் சிங்கள இனவாத அச்சுறுத்தல் இன்னொரு பக்கம் யானையால் அச்சுறுத்தல். இந்த மக்களுக்கு தேவைப்படுகின்ற உத்தரவாதங்களையும் உதவிகளையும் வசதிகளையும் செய்யாமல் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் என்று கூவித்திரிவது மன்னிக்க முடியாத ஒரு குற்றமாகும்.

> மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைப் பிரதேசமான மயிலந்தனைமடு பெரிய மாதந்தனை பிரதேசத்தில் மேய்ச்சல்தரை பகுதியில் கால்நடை பண்ணையாளர்களை அச்சுறுத்தி மாடுகளை வெட்டி அவர்களை பரம்பரையான மேய்ச்சல்தரையில் இருந்து ஓடவைப்பதற்காக முழுமூச்சிலான திட்டத்தை சிங்கள பேரினவாதிகள் தீவிரப்படுத்தியுள்ளனர். பண்ணையாளர்களின் இந்த பிரச்சனைகளை அவர்கள் பல இடங்களில் முறையிட்டுள்ளனர். ஆனால் எந்த ஒரு இடத்திலும் அவர்களுக்கு முடிவு இல்லாமல் தொடர்ச்சியாக அவர்களின் வாழ்வே கேள்விக்குறியாகின்ற நிலையில் தான் தற்போது இருக்கின்றது.



# சிலை அரசியல்: அறிவும் செயலும்



நிலாந்தன்

வடக்கில் கடந்த ஒரு கிழமைக்குள் மட்டும் மூன்றுக்கு மேற்பட்ட சிலைகள் திறக்கப்பட்டுள்ளன.நடராஜர் சிலை,வள்ளுவர் சிலை,சங்கிலியன் சிலை, என்பவற்றோடு திருநெல்வேலி சந்தையில் மணிக்கூட்டுத் தூபி ஒன்று.

இச்சிலைகளுக்குப் பின்னால் இருக்கும் அரசியலை கடந்த வாரக்கட்டுரையில் ஓரளவுக்குப் பார்த்தோம்.இச் சிலைகளுக்குப் பின்னால் இருக்கும் மத அரசியலைத் தனியாயகப் பார்க்கவேண்டும்.இன்று இக் கட்டுரையானது இச்சிலைகளின் அழகியல் அம்சங்களைக் குறித்த விவாதக் குறிப்புகள் சிலவற்றை முன்வைக்கின்றது.

பொதுவெளிச் சிற்பங்கள் அவற்றை நிறுவும் நிறுவனங்கள் அல்லது தனி நபர்களின் விருப்பங்களை மட்டும் பிரதிபலிப்பவை அல்ல. அதைவிட ஆழமான பொருளில் குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் கலை மேதமையை, அழகியல் உச்சங்களை, அரசியல் கலாச்சார பல்வகைமையை வெளிக்காட்டுபவைகளாக அமைய வேண்டும்.ஒரு வெளிப்பார்வையாளர் கண்டு வியக்கும் அளவுக்கு அது ஒரு வெற்றி பெற்ற கலைப் படைப்பாக அமைய வேண்டும்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சில பொதுச் வெளிச் சிற்பங்களை அல்லது சிலைகளை அல்லது தூபிகளைப் பார்க்கலாம்.

முதலில் மருதனார்மடம் ஆஞ்சநேயர் சிலையிலிருந்து தொடங்கலாம். இச்சிலை ஒரு வழிபாட்டு உருவாகத்தான் அந்த சந்தியில் நிறுத்தப்பட்டுள்ளது.இச்சிலையை உருவாக்கியவர்கள் அதனை ஒரு வழிபாட்டு நோக்கத்தையும் மனதில் வைத்து உருவாக்கியிருக்கிறார்கள் என்பது வெளிப்படையானது.அப்படியென்றால் தங்களுடைய இஷ்ட தேவதையை சிலையாக்கும்போது அதன் அழகியல் முழுமை குறித்து ஆகக்கூடிய பட்ச கவனத்தைச் செலுத்தியிருக்க வேண்டும்.

உதாரணமாக ஒருவர் தனக்கு மிகவும் பாசத்துக்குரிய தன் தாய்க்கு ஒரு சிலை வைக்கும்போது அச்சிலை தாயைப் போலவே இருக்க வேண்டும் என்றுதானே எதிர்பார்ப்பார் ? அது வேறு யாரையோ போல இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பாரா? இல்லைத்தானே? இது ஆஞ்சநேயருக்கும் பொருந்தும்.

ஆஞ்சநேயரின் ஆகிருதியைக் காட்டுவதுதான் சிலையின் நோக்கம் என்றால் அதற்கென்று செலவழிக்கத் தயாராக இருக்க வேண்டும். அதற்குரிய துறைசார் நிபுணர்களை அணுக வேண்டும்.அதை ஒரு தவமாகச் செய்ய வேண்டும். ஆனால் மருதனார்மடம் ஆஞ்சநேயர் தமிழ் அழகியலின் வீழ்ச்சியின் குறியீடாக நிற்கிறார்.அவருடைய முகத்துக்கும் உடலுக்கும் இடையிலான அளவுப் பிரமாணம் பிழைத்து விட்டது. அதனால் அது ஒரு கறாளையான சிலை.

இத்தனைக்கும் அச்சிலை இருப்பது யாழ் பல்கலைக்கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறை அமைந்திருக்கும் வளாகத்தில் இருந்து சில நூறு மீட்டர் தொலைவில்தான்.ஆனால் பல்கலைக்கழகத்தின் இது சம்பந்தப்பட்ட துறைசார் ஆளுமைகளிடமிருந்து ஆலோசனைகள் பெறப்பட்டு ஆஞ்சநேயர் சிலை கட்டப்பட்டதாகத் தெரியவில்லை. அல்லது குறைந்தபட்சம் அந்த வளாகம் வளர்ச்சியடைந்த பின்னராவது அது தொடர்பான ஆலோசனைகள் பெறப்பட்டதாகத் தெரியவில்லை.ஆயின்,யாழ் பல்கலைக்கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் கற்பிக்கப்படுகின்ற சிற்பம் தொடர்பான அழகியல் அறிவிற்கும் ஆஞ்சநேயருக்கும் ஒரு தொடர்பும் கிடையாது. அதாவது அறிவுகும் செயலுக்கும் இடையிலுள்ள இடைவெளி.

இந்த இடைவெளி தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரும்பாலான பொதுச் சிற்பங்களுக்குப் பொருந்தும்.



> இந்த இடைவெளி தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரும்பாலான பொதுச் சிற்பங்களுக்குப் பொருந்தும். மருதனார்மடம் ஆஞ்சநேயர் மட்டுமல்ல, ஆனையிறவுச் சிவனின் மீதும் அவ்வாறான விமர்சனங்கள் உண்டு. அதை உலோகத்தில் வார்த்திருந்தால் அதன் அழகு மேலும் பொலிந்திருக்கும் என்ற ஒரு கருத்து உண்டு. மேலும் அச்சிலையை வடிவமைக்கும் போதும் அது தொடர்பான துறைசார் நிபுணத்துவ ஆலோசனை பெறப்பட்டதா என்ற கேள்வி உண்டு.





மருதனார்மடம் ஆஞ்சநேயர் மட்டுமல்ல,ஆனையிறவுச் சிவனின் மீதும் அவ்வாறான விமர்சனங்கள் உண்டு. அதை உலோகத்தில் வார்த்திருந்தால் அதன் அழகு மேலும் பொலிந்திருக்கும் என்ற ஒரு கருத்து உண்டு. மேலும் அச்சிலையை வடிவமைக்கும் போதும் அது தொடர்பானதுறைசார் நிபுணத்துவ ஆலோசனை பெறப்பட்டதா என்ற கேள்வி உண்டு.

சிவ நடனம் எனப்படுவது கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டதைப் போல ஒரு பிரபஞ்ச நடனம் என்று வர்ணிக்கப்படுகிறது. அப் பிரபஞ்ச அசைவை ஒரு அசையாச் சிலைக்குள் கொண்டு வருவதற்கு மகத்தான சிற்பிகள் தேவை. அசையாச் சிலை ஒன்று பிரபஞ்சப் பேரசைவைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். அது ஓர் அழகியல் சவால். சுந்தர ராமசுவாமி கூறுவதுபோல ஒரு வேட்டை நாயின் பாய்ச்சலை ஓர் ஒளிப் படத்துக்குள் கைப்பற்றுவது போல.

ஆனால் நடராஜர் சிலையை வடிவமைக்கும்போது அது தொடர்பான துறைசார் நுட்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. உரிய துறைசார் நிபுணர்களோடு அது தொடர்பாக உரையாடப்பட்டதாகவும் தெரியவில்லை. இது ஆஞ்சநேயருக்கும் நடராஜருக்கும் மட்டுமல்ல,முத்திரச் சந்தையடி சங்கிலியன் சிலையும் உட்பட,தமிழில் பெரும்பாலான பொதுவெளிச் சிற்பங்களுக்கும் பொருந்தும்.

தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவு தூண்களில் தொடங்கி முள்ளிவாய்க்கால் நினைவுச் சிற்பம் வரையிலும் நிலைமை அப்படித்தான் காணப்படுகிறது. உரும்பிராயில் சிவகுமாரன் சிலையில் தொடங்கி வவுனியாவில் பத்மநாபா சிலை வரையிலும் நிலைமை அதுதான்.அவரவர் தன் வசதிக்கேற்ப தன் அழகியல் புரிதலுக்கு ஏற்ப சிலைகளை உருவாக்குகிறார்கள். ஆனால் அது ஒரு மக்கள் கூட்டத்தின் கலை மேதமையை பிற நாட்டவர்கள் கண்டு பிரமிக்கும் அளவுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற அடிப்படை விஷயத்தைத் தவற விடுகிறார்கள்.

இதில் ஆகப்பிந்தியது கடந்த வாரம் திருநெல்வேலிச் சந்தியில் திறக்கப்பட்ட மணிக்கூட்டுடன் கூடிய ஓர் அலங்காரத்தூபி.அது யாழ் பல்கலைக்கழக சுற்றுச்சூழலுக்குள் காணப்படும்

10 ஆம் பக்கத்தில் மிகுதி ...



# சிலை அரசியல்: அறிவும் செயலும்



ஒரு சந்தி.அதுவும் பண்ணைச் சுற்று வளைவைப் போலவே பிறசமூகங்கள் புழங்கும் ஒரு சந்தி. யாழ்ப்பாணத்தின் உயர் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு மிக அருகில் காணப்படும் அச் சந்தியில் வைப்பதற்கு அந்த ஊரைச் சேர்ந்த முன்னோடிகள் அல்லது,நிறுவன உருவாக்கிகள் என்று கூறத்தக்க யாருடைய சிலையும் இல்லையா? கடந்த வாரம் திறக்கப்பட்ட சிறுதூபி தமிழ் மக்களின் அழகுணர்ச்சியை வெளிப்படுத்துகின்றதா? தமிழ்மக்களின் பெருமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதா?

ஏன் அதிகம் போவான் யாழ்.பல்கலைக்கழகத்தில் கட்டப்பட்டிருக்கும் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் கூட ஓர் அழகியல் முழுமை என்று கூற முடியாது.அதிர்ச்சியூட்டும் நவீனம் என்று கூற முடியாது.உலகிலுள்ள இதுபோன்ற நினைவுச்சின்னங்களோடு ஒப்பிடுகையில் அது மிகவும் சாதாரணமானது.

ஒரு பல்கலைக்கழக வளாகத்தில் காணப்படும் நினைவுச் சின்னத்தின் நிலைமை அதுவென்றால், அதுவும் இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக் கேட்டுப் போராடும் ஒரு மக்கள் கூட்டம் தனது உயர்கல்வி நிறுவனத்தில் அப்படித்தான் ஒரு நினைவுத் தூபியைக்க கட்டுமென்றால், அதிலிருந்து சற்றுத் தள்ளியிருக்கும் ஏனைய பொது வெளிச்சிற்பங்கள் பற்றி அதிகம் பேசத் தேவையில்லை.இது ஒரு பொதுவான போக்காக தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

ஈழத்தமிழர்கள் மத்தியில் பொதுவெளிச் சிற்பங்களை உருவாக்கும் பலரும் அது தொடர்பான துறைசார் நிபுணர்களை அணுகுவதில்லை என்பதைத்தான் பெரும்பாலான சிற்பங்கள் நமக்கு உணர்த்துகின்றன. இதில் மிக அருந்தலான புறநடைகளை உண்டு.அப்புறநடைகள் யாவும் அதற்குரிய துறைசார் அறிவுடையோரால் உருவாக்கப்பட்டவை.

இவ்வாறான சிலைக் கலாசாரத்தின் பின்னணியில்,சிலை அரசியலின் பின்னணியில்,பண்ணைச் சுற்றுவளைவில் நிறுவப்பட்டிருக்கும் திருவள்ளுவரை இனிப் பார்ப்போம்.அச்சிலைக்குப் பின்னால் உள்ள மொழி,மத அரசியல் குறித்து ஏற்கனவே சமூகவலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் பரவலாக வாதப்பிரதிவாதங்கள் போய்க்கொண்டிருக்கின்றன.இங்கு அச்சிலையின் அழகியல் அம்சங்களை மட்டும் கவனிப்போம்.

கண்ணாடி நாரிழையில் செய்யப்பட்ட

> ஈழத்தமிழர்கள் மத்தியில் பொதுவெளிச் சிற்பங்களை உருவாக்கும் பலரும் அது தொடர்பான துறைசார் நிபுணர்களை அனுகுவதில்லை என்பதைத்தான் பெரும்பாலான சிற்பங்கள் நமக்கு உணர்த்துகின்றன. இதில் மிக அருந்தலான புறநடைகளை உண்டு.அப்புறநடைகள் யாவும் அதற்குரிய துறைசார் அறிவுடையோரால் உருவாக்கப்பட்டவை.



அச்சிலையானது தமிழ்நாட்டைச் சேர்ந்த விஜிபி குழுமத்தின் தலைவர் சந்தோசம் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும்.இலங்கையின் எல்லா மாவட்டங்களுக்கும் மொத்தம் 18 சிலைகளை அவர் வழங்கியிருக்கிறார்.அதில் இரண்டு வடக்கு கிழக்குக்கு.ஒன்று திருகோணமலைக்கு.மற்றது யாழ்ப்பாணத்திற்கு. இச்சிலைகள் யாவும் வழமையானவை. அவற்றின் அழகியல் அம்சங்கள் குறித்து விவாதிக்க அதிகமில்லை.ஆனால் பண்ணைச் சுற்று வளைவில் அச்சிலை வைக்கப்பட்டிருக்கும் இடம்,அதன் பின்னணி என்பவற்றைத் தொகுத்து பார்க்கும் போது என்ன தோன்றுகிறது?

அச்சிலைக்காகக் கட்டப்பட்ட பீடத்தோடு சேர்த்துப் பார்க்கும்போது அச்சிலை சிறுத்துப்போய்த் தெரிகிறது. முத்தவெளி, டச்சுக்கோட்டை என்பவற்றின் பின்னணியில் அச்சிலையை நிற்கின்ற வள்ளுவராக வடிவமைத்து இருந்திருந்தால் ஒரு பிரமாண்டத்தை காட்டியிருக்கலாம். ஆனால் வீதிச்சுற்று வளைவில் எதைக் கட்டினாலும் அதற்குப் போக்குவரத்துத் துறைசார் வரையறைகள் உண்டு என்று சுட்டிக் காட்டப்படுகிறது.அதன்படி ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் எதையும் கட்ட முடியாது.ஆயின் கிடைக்கும் வரையறுக்கப்பட்ட வெளிக்குள் எப்படிப்பட்ட ஒரு சிலையை ஸ்தாபிப்பது என்பதில் அரசியல் மற்றும் அழகியல் தெரிவுகள் இருக்க வேண்டும். கோட்டை,முத்தவெளி என்பவற்றின் பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது அச்சிலை போதாது என்ற உணர்வே எழுகிறது.

இதுதான் பிரச்சினை.இதுதொடர்பில் துறைசார் நிபுணர்களின் அறிவை யாரும் பெற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.சிலைகளின் விடயத்தில் மட்டுமல்ல, பொது வெளிச் சிற்பங்கள்,பொதுக் கட்டங்கள் போன்றவற்றில் மட்டுமல்ல,அரசியலும்



உட்பட ஈழத்தமிழர்களின் பெரும்பாலான பொதுவிடயங்களில் அறிவுக்கும் செயலுக்கும் சம்பந்தமே இல்லை.அறிவு தன்பாட்டில் பாடப்புத்தகங்களில் இருக்கின்றது.செயல் தன்பாட்டில் நடக்கின்றது.

அறிவுக்கும் செயலுக்கும் இடையிலான இந்த இடைவெளி அதிகமாக வெளிப்படும் இடமும் அதிக நாசத்தை விளைவித்த இடமும் எதுவென்றால் தமிழ் அரசியல்தான்.சிலைகள் கோணல்மாணலாக வருவதோ அல்லது பொருத்தமற்ற இடங்களில் பொருத்தமற்ற அளவுகளில் நிர்மாணிக்கப்படுவதோ அழகியற் சிதைவு மட்டுமே.பண்பாட்டுச் சிதைவு மட்டுமே. ஆனால் அரசியலில் அவ்வாறு துறைசார் நிபுணத்துவத்தைப் புறக்கணிப்பது அல்லது சட்டக் கண்களால் எல்லாவற்றையும் அளப்பது என்பது எத்துணை பாரதூரமானது என்பதனைக் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கண்டோம்.அறிவையும் செயலையும் பொருத்தமான விதங்களில் இணைக்கத் தவறிய ஒரு சமூகம் இப்பொழுது சிலைகளை வைத்துவிட்டு ஆளை யாள் தின்று தீர்க்கின்றதா?

# ஈழப் போராட்ட வரலாற்றை நாவல் இலக்கியமாக்கிய
# செங்கை ஆழியானின் நேர்த்திய படைப்பாளுமை

ஐங்கரன் விக்கினேஸ்வரா

**ஈழத்து போர்க்கால நாவல் இலக்கிய வரலாற்றில் படைப்பாளுமை மிக்க செங்கை ஆழியானின் மிகப்பெருமளவு நூல்களை வெளியிட்ட ஈழத்து எழுத்தாளர் எனும் பெருமைக்குரிய செங்கை ஆழியானின் புதினங்கள், சிறுகதைகள், புவியியல் நூல்கள், வரலாற்று ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் மற்றும் பதிப்புத்துறை எனப் பல துறைகளிலும் என அவரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்**



வரலாற்று நூல் எழுதுவதென்பது ஒரு கலை. அதற்கு வரலாற்றுக் குறிப்புகளே முக்கியம். ஆனால், வரலாற்றினை முக்கியமாகக் கொண்ட நவீனம் ஒன்றைப் படைப்பதென்பது முற்றிலும் மாறுபட்டதோரு தனிக்கலை. இக் கலையில் தனக்கென தனி முத்திரை பதித்துள்ளார் செங்கை ஆழியான்.

### 1977 இனக்கலவர ஆவணம்:

1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இனக்கலவரத்தின் போது யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரச வன்முறைகள் பற்றி செங்கை ஆழியான் எழுதிய 24 மணி நேரம்என்கிற நூல் முக்கியமான வரலாற்று ஆவணமாகும். ஈழத்து போர்க்கால வரலாற்றினை சிறுகதை, நாவல் இலக்கியமாக எதிர்கால சந்ததிக்கு வெளிப்படுத்திய படைப்பாளுமை மிக்க செங்கை ஆழியானின் பணி ஈழ வரலாற்றில் என்றும் போற்றப்படும்.

செங்கை ஆழியானின் இலக்கியச் செயற்பாடுகளில் அவரது ஆவணப்படுத்தல் முயற்சி மிக முக்கியமானது ஆகும். மட்டக்களப்பில் ஏற்பட்ட சூறாவளியைப் பற்றி அவர் எழுதிய 12 மணி நேரம் என்கிற நூல் இயற்கை இடரின் துயரத்தை வரலாற்று வரிகளாக்கிய நூலாகும். இந்த இரண்டு நூல்களையும் நீல வண்ணன் என்ற புனை பெயரில் எழுதியுள்ளார்.


### ‘தீம்தரிகிடதித்தோம்’ நாவல் :

ஈழப்போராட்த்தின் மூல வேர் எது என்பதை அரசியல் பின்னணியோடு தொட்டுக் காட்டுகிறது ‘தீம்தரிகிடதித்தோம்’ எனும் நாவல்.

இந்நாவலில் இலங்கை அரசாங்கம் 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவந்த போது மலர்ந்த கற்பனை காதல் கதையை சொல்கிறது.

சிங்களம் ஆட்சி மொழியாக்கப்பட்ட போது தந்தை செல்வா, ஜி.ஜி. பொன்னம்பலம், சி. சுந்தரலிங்கம் போன்ற முதுபெரும் தலைவர்கள் சாத்விக முறையில் கிளர்ச்சி நடத்தி, தமிழ் மக்களின் எதிர்ப்பைத் தெரிவித்ததை வெளிப்படுத்தும் இந்நாவலும் ஓர் வரலாற்று நூலாக எழுகிறது.

இந்நாவலில் புதுமை என்னவென்றால்





தனிச்சிங்கள மொழிச்சட்ட விவாதம் நடந்த போது எடுக்கப்பட்ட குறிப்புகளும், விவாதமும் காட்டப்பட்டிருக்கும் களம் ஒரு பக்கம் போய்க் கொண்டிருக்க, இன்னொரு பக்கம் தமிழ் இளைஞனுக்கும் சிங்களப் பெண்ணுக்குமான காதல் களம் காட்டப்பட்டிருக்கும். நாவல் முடியும் போது இனக் கலவரம் ஆரம்பிக்க அவர்களின் காதலும் இனவெறியில் எரிந்து போகும்.

அத்தோடு அறவழியில் நடந்த போராட்டத்தை ‘சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான போர்’ என்று திசைதிருப்பு, அன்றைய இலங்கைப் பிரதமர் பண்டாரநாயக்கா, காவல்துறையின் துணையோடு சிங்கள சமூக விரோதிகளை ஏவிவிட்டு போராடிய ஈழத்தமிழர்களை அடித்து நொறுக்கினார். பரம்பரை பரம்பரையாக தமிழ் மக்கள் வாழக்கூடிய தமிழ்ப்பிரதேசங்களில் சிங்களவர்களை வலுக்கட்டாயமாக குடி அமர்த்தினார். பொருளாதார, சமூக நெருக்கடிகளை ஏற்படுத்தினார். தமிழ் மக்களின் அனைத்து எதிர்ப்புகளை மீறி சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்கினார்.

தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கி இரண்டாந்தர குடிமக்களாக்கும் பிரிவினை உணர்வை ஏற்படுத்தினார். சிங்கள ஆட்சியின் கொடுமையை இனியும் சகிக்க முடியாது என்ற சூழ்நிலையில் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தி போராட நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்பதையும் இந்நாவல் சித்தரிக்கிறது.

### மரணங்கள் மலிந்த பூமி :

செங்கை ஆழியானின் மரணங்கள் மலிந்த பூமி போர்க்கால சமூக பொருளாதாரப் பிரச்சனைகளையும் , அன்றைய போர்க்கால மரணங்கள் குறித்த நிகழ்




வுகளையும் சித்தரிக்கும் இந்நாவலின் வாயிலாகக் கூறப்படும் சம்பவங்கள் போர்க்கால சாட்சியமாக விளங்குகிறது. நீண்ட காலமாக தொடர்ந்த, தமிழ் மக்கள் அனுபவித்த விடயங்கள் மரணங்கள் மலிந்த பூமியாக வரலாற்று இலக்கியமாக உருபட்டிருக்கிறது.

செங்கை ஆழியானின் ‘அக்கினி’ நாவலின் கதைக்கரு துயர்மிகுந்த தமிழ் மக்களின் வாழ்வினை எடுத்துயம்பும் நாவலாகும். இந்நூல் மிகவும் போற்றப்பட வேண்டிய கருத்தாழம் மிகுந்த நாவல் ஆகும்.

தமிழ் மண்ணில் வாழத் துடிப்பவர்கள் அழிக்கப்பட்டனர். தாலிகட்டிய கணவனும் மனைவியும் தாம் மாற்றிக் கொண்ட மணமாலைகள், மலர் மாலைகள் வாடுவதற்கு முன்னரே ஷெல் விழுந்து துடிதுடித்து இறந்தனர். தாலி கட்டியவன் இரத்த வெள்ளத்தில் மணமாலையோடு மிதந்த காட்சியைக் கண்ட மணப்பெண்கள் , காதலித்தவன் கதைத்து விட்டு வீடு சேருமுன் அழிக்கப்பட்ட கதைகள். தோட்டம் சென்றவர்கள் பிணமாக வீடு வந்த காட்சிகள். அலுவலகம் சென்ற கணவனின் உடம்பு சாக்குப் பையுள் துண்டு துண்டாக வந்த காட்சியை கண்ட மனைவிமார். பாடசாலை சென்ற தம் பிள்ளைகள் குண்டடிப்பட்டு மருத்துவமனையில் இறந்த செய்தி சுமந்த பெற்றோர். அப்பாவி மக்கள் அராக்கர்களால் கத்தரிக்காய், வெண்டைக்காய் போல் துண்டந்துண்டமாகத் துடிக்கத் துடிக்கத் துண்டாடப்பட்ட செய்திகள் கேட்ட மக்கள். இவற்றைத் தாங்கி வரும் செய்தித்தாள்கள் என வரலாற்றை மிக நுட்பமாக பதிவு செய்துள்ளார்.

‘அக்கினி’ நாவலின் கதை நடந்த காலப் பின்னணியில் கதாநாயகி காதலித்ததால் கருவுண்டால், ‘பங்கருக்குள்’ ஒடி ஒதுங்கிய காதலன் தன் தாயின் கதி தெரியாது ஓடுகிறான். அங்கே அவனின் முடிவாக, கதாநாயகி கலங்கினால், வைராக்கியம் கொண்டாள். அக்கினியைக் கருவாகக் கொண்டேன். போராளியான தன் சகோதரனுக்கு கடிதமெழுதுகின்றாள். தம்பி என் வயிற்றில் வளர்வது கருவன்று. அக்கினி ஆமாம் . இந்தப் பாவிகளைப் பழிகாரார்களைச்சுட்டெரிப்பதற்கு நான் என் வயிற்றில் வளர்ப்பது அக்கினிதான் என வைராக்கியம் கொள்ளும் நாவலாகும்.

### ‘யாழ்ப்பாணக் கிராமம் ஒன்று’ குறுநாவல்:

இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியமை, அதனைத் தொடர்ந்து இலங்கை இராணுவம் கோட்டைக்குள் நிலை கொண்டமை. கோட்டை விடுதலைப் போராளிகளால் முற்றுகையிடப்பட்டமை, பின்னர் கோட்டைக்குள் இருந்த இராணுவம் பின்னர் தப்பியோடித் தீவுப்பகுதிகளில் நிலை கொண்டமை, அங்கிருந்து யாழ்ப்பாணப் பகுதியை நோக்கி எறிகணைகளையும், விமானக் குண்டுகளையும் வீசியமை முதலிய சம்பவங்களின் சூழ்நிலையில் யாழ்ப்பாணக் கிராமமான கொட்டடிக் கிராமம் பட்ட அவலங்களைச் சித்திரிக்கிறது ‘யாழ்ப்பாணக் கிராமம் ஒன்று’ எனும் குறுநாவல்.

12 ஆம் பக்கத்தில் மிகுதி ...

# ஈழப் போராட்ட வரலாற்றை நாவல் இலக்கியமாக்கிய செங்கை ஆழியானின் நேர்த்திய படைப்பாளுமை



### கடல் கோட்டை ஆவணம் :

ஈழத்தமிழர்களின் தொண்மையான வரலாற்றை கூறும் கடல் கோட்டை ஆவணத்தை படைப்பதற்கு செங்கை ஆழியான் செய்துள்ள ஆய்வுகள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அதீதமானதே. வரலாற்றுக் குறிப்புகளும் கற்பனைத்திறனும் மட்டுமின்றி, நூற்பயிற்சியும், ஆராய்கின்ற அனுபவமும் அவசியம். இவையனைத்தும் கைவரப் பெற்றவராக இப்புதுமை எழுத்தாளர் விளங்குகியமை இவ் ஆவணம் மூலம் புலப்படுத்துகின்றது.

என்னைப்போல சமகால எரியும் பிரச்சினைகளைத் தம் படைப்புகளில் பதித்தவர்கள் மிகக் குறைவு என்பேன். ஒரு சமூகவியல் ஆவணங்களாகவும், வரலாற்று ஆவணங்களாகவும் என் புனைகதைகள் அமைந்துள்ளன. புனைகதை சார்ந்த தொகுப்புக்களாக 40 உம், அவை சாராத தொகுப்புக்களாக 8 உம் வெளிவந்துள்ளன. இந்த எண்ணிக்கையைக் கொண்டு செங்கை ஆழியான் நிறைய எழுதுகிறார் எனக் கூறுகிறார்கள். தமிழக எழுத்தாளர்களுடன் ஒப்பிடும் போது நான் ஒன்றும் பெரிதாக எழுதிக் குவித்துவிடவில்லை. என்னால் எழுதாமலோ படிக்காமலோ இருக்க முடியாது. கிணறு இறைக்க இறைக்கத் தான் ஊறும். கற்பனை வறட்சியும் கால பயமும் பல எழுத்தாளர்களது.

பேனாக்களை மூடி வைத்துள்ளன. அதற்கு நான் என்ன செய்வது? எனக் கூறும் செங்கை ஆழியானின் கருத்து ஈழத்து நாவல் இலக்கிய வரலாற்றில், அவரின் சாதனையை எடுத்துக்காட்டும் பொருத்தமான சுய சான்றாகும்.

செங்கை ஆழியான் என்ற புனைபெயரால் பரவலாக அறியப்படும் க. குணராசா 1941ஆம் ஆண்டு ஜனவரி 25ம் திகதி யாழ் வண்ணார்பண்ணையில் பிறந்த இவர் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் உயர் கல்வியை இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் கற்றபின் பட்டம் பெற்று நிர்வாக சேவை அதிகாரியாகவும் பணியாற்றியிருந்தார்.

### வாடைக் காற்று நாவல் வரலாற்றில் ஒரு மைல் கல் :

மிகப்பெருமளவு நூல்களை வெளியிட்ட ஈழத்து எழுத்தாளர் எனும் பெருமைக்குரிய இவரின், புதினங்கள், சிறுகதைகள், புவியியல் நூல்கள், வரலாற்று ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் மற்றும் பதிப்புத்துறை எனப் பல துறைகளிலும் க. குணராசாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

மண்வாசனை கொண்ட எழுத்தாளர் வரிசையில் செங்கை ஆழியானுக்கு இடம் பிடித்துக் கொடுத்த வாடைக் காற்று என்ற நாவல் ஈழத்து நாவல் வரலாற்றில் ஒரு மைல் கல். செங்கை ஆழியானின் காட்டாறு, கடற்கோட்டை, ஒரு மைய வட்டங்கள் முதலிய நாவல்கள் இத்தளத்தில் எழுதப்பட்டவையாகும். நீலவண்ணன் என்ற பெயரிலும் ஆக்கங்கள் வரைந்தார்.




### செங்கை ஆழியானின் சமூகம் நோக்கிய பார்வை :

ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த கிடுகு வேலி என்ற இவரது தொடர்கதை வாசகர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தது டன் இவர் எழுதிய வாடைக்காற்று புதினம் திரைப்படமாக தயாரிக்கப்பட்டு தரமான படைப்பு எனப் பலராலும் பாராட்டப்பட்டிருந்தது. அத்துடன் தொகுப்பு முயற்சிகள் மற்றும் பதிப்புத்துறை எனப் பல துறைகளிலும் பங்களிப்புச் செய்திருந்தார்.

செங்கை ஆழியான் 'புவியியல்' என்ற அறிவியல் இதழை நடத்தினார். மேலும், 'விவேகி' என்ற இலக்கிய இதழின் ஆசிரியர்களில் ஒருவராக விளங்கினார். சிங்கள இதழ்களான ராவய, சிலுமின, லங்காதீப முதலியவற்றில் இவரது சிறுகதைகள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன.

மண்ணும் மக்களும், மக்களின் உரிமைக் குரல்கள், உழைப்புச், சுரண்டல், சாதிக் கொடுமை. சீதனக் கொடுமை, இனவெறிப் போராட்டம் என்ற வகையில் செங்கை ஆழியானின் சமூகம் நோக்கிய அகலப் பார்வை, அவரது நாவல்களின் கருப்பொருளாக அமையலாயின. நந்திக்கடல், சித்ரா பௌர்ணமி, ஆச்சி பயணம் போகிறாள், முற்றத்து ஒற்றைப் பனை, வாடைக்காற்று, காட்டாறு, இரவின் முடிவு, ஜன்ம பூமி, கந்தவேள் கோட்டம், கடற்கோட்டை, கிடுகு வேலி போன்ற நாவல்களை அவர் வெளியிட்டுள்ளார்.

### சிங்கள மொழிபெயர்ப்பு:

இவரது இரவு நேரப் பயணிகள் என்ற சிறுகதைத் தொகுப்பு, 'ராத்திரி நொனசாய்' எனச் சிங்களத்தில் சாமிநாதன் விமல் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. 'காட்டாறு' என்ற நாவல் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 'வன மத கங்க' என்ற பெயரிலும், 'வாடைக்காற்று' என்ற நாவலும் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு நூலாக வெளியிடப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பெருமையாகும்.

அத்துடன் சிங்கள இதழ்களான ராவய, சிலுமின, லங்காதீப முதலியவற்றில் இவரது சிறுகதைகள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன.

### விருதுகளை குவித்த ஆளுமை :

இலங்கை இந்து கலாச்சார அமைச்சு, 'இலக்கியச் செம்மல்' என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. கனடா சி.வை. தாமோதரம்பிள்ளை ஒன்றியம் 'புனைகதைப் புரவலர்' என்ற விருதை வழங்கி கௌரவித்துள்ளது. வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு 2001 ஆம் ஆண்டு நடத்திய தமிழ் இலக்கிய விழாவில் 'ஆளுநர் விருது' வழங்கிச் சிறப்பித்தது .

இலங்கை அரசு இலக்கியத் துறையின் உயர்ந்த விருதான 'சாகித்திய ரத்னா' விருதினை 2009 ஆம் ஆண்டு செங்கை ஆழியானுக்கு வழங்கிச் சிறப்பித்தது. மேலும் 'கலைஞானச்சுடர்' 'கலாபூஷணம்' முதலிய பட்டங்களையும் பெற்றுள்ளார்.

### பரந்து விரிந்த படைப்பாளுமை :

தன்னுடைய 75ஆவது பிறந்த நாள் நினைவாக 2016 ஜனவரி 25 ஆம் நாள் 'யாழ்ப்பாணம் பாரீர்' என்ற மகுடத்தில் விவரண நூல் ஒன்றினை வெளிக்கொணர்ந்த செங்கை ஆழியான் 185 க்கும் மேற்பட்ட சிறுகதைகள், ஐம்பது நாவல்கள், இலக்கியம், கட்டுரை, விமர்சனம், திறனாய்வு, நூற்றுக்கும் மேற்பட்ட பாடநூல்கள், திரைப்படம் என பல பரிமாணங்களில் இவருடைய படைப்பாளுமை பரந்து விரிகின்றது.

ஈழத்தின் இன்றைய படைப்பாளர்களுள் செங்கை ஆழியான் மிகவும் வெற்றிகரமானவர் என ஈழத்து மார்க்சிய இலக்கியத் திறனாய்வாளர் பேராசிரியர் கலாநிதி கா.சிவத்தம்பி புகழ்ந்துரைத்துள்ளார். ஈழத்து நவீன இலக்கிய உலகின் ஈடிணையற்ற இலக்கியவாதியாகத் திகழ்ந்த செங்கை ஆழியான் 28 பெப்ரவரி 2016 தனது 75வது வயதில் இயற்கையெய்தினார்.





# சஜித்தின் ஜனாதிபதி கனவு ஈடேற ரணிலோடு கூட்டுசேர்வதே சிறப்பு

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டெடுத்து நாட்டை ஓரளவு பொருளாதார தளம்பல் நிலையில் இருந்து காப்பாற்றியது ரணில் என்பதை நிச்சயமாக யாரும் மறுக்க முடியாத ஒன்றாகும். தனி ஒருவராக தேசியப்பட்டியல் ஆசனத்தில் உள்ளே வந்து பிரதமராகி பின்னர் ஜனாதிபதியாவது எல்லாம் திரைப்பட காட்சிகள் போல நடந்த சம்பவங்களே ஆனாலும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய காலத்திலுருந்தே IMF கடனை பெற்றுவிட வேண்டும் என்று இலங்கை அரசு மிகவும் தீவிரமாக முயற்சி செய்தும் பலனில்லாமல் போயிருந்தது .

நாட்டின் நிலையான பொருளாதார ஸ்தீர தன்மை இன்மை ஊழல் ஆட்சியாளர்கள் மீதுள்ள சர்வதேச விசாரணைகள் மனித உரிமை மீறல்கள் என பல காரணங்களை காட்டி IBS கடனுதவியை மறுத்து இருந்தது ஆனாலும் ரணில் ஜனாதிபதி ஆன பின்னும் கூட முழுமையாக ஒத்து கொள்ளும் நிலையில் IMF இல்லை என்பதே உண்மை. ரணிலின் மீதுள்ள மத்திய வங்கி பிணை முறி பிரச்சனைகள் நாட்டின் பொருளாதார பிரச்சனைகள் முதற்கொண்டு ரணிலின் மீது பாரிய அழுத்தங்கள் உள்ள நிலையிலும் ரணிலின் மிக தீர்க்கமான முயற்சியான IMF கடன் அவரின் மீதான நம்பிக்கையை நாட்டுமக்களிடையே வலுவாக்கியுள்ளது .

நாட்டுமக்களிடையே பாரிய அழுத்தங்கள் பொருளாதார சுமைகள் உள்ள நிலையில் IBS கடன் உதவியானது மக்களை நிச்சயமாக விடுபட வைக்கும். பெட்ரோல் சமையல் எரிவாயு போன்றவற்றின் மிக நீண்ட வரிசை காத்திருப்புக்கள் தற்காலிகமாக விலகும். ஆனால் நாட்டு மக்கள் இது தான் நிரந்தர தீர்வு என்று எண்ணி இருப்பார்களேயானால் எதிராக்காலத்தில் மிக மோசமான நிலைக்கு எம்மை இட்டு செல்லும் மிக கடினமான கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலேயே இந்த கடன் வழங்கப்பட்டுள்ளது மேலும் குறிப்பிட்ட காலத்துக்குள் திருப்பி செலுத்த வேண்டும் அவ்வாறு தவறும் பட்சத்தில் சர்வதேச அளவில் பாரிய அழுத்தங்களுக்கு நாடு முகம் கொடுக்க வேண்டிவரும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இது இவ்வாறு இருக்க சஜித்தின் அடுத்த கட்ட நகர்வு என்னவாக இருக்க போகிறது என்பதில் பாரிய கேள்விகள் உள்ளன. ஒரு வேளை எதிர்காலத்தில் ரணிலின் தனி ஒருவன் நிலை சஜித்துக்கு வரலாம் என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கூற்றாக உள்ளது. ரணிலின் மீதுள்ள மக்களின் வெறுப்பின் காரணமாகவே சஜித்தின் அணி ரணிலின் பக்கம் போகாமல் இருக்கிறார்கள். அதில் ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார முதலானோர் சற்று மாறுபட்டு ஆரம்பத்திலேயே ரணிலோடு ஒட்டி கொண்டார்கள். ஆனால் IMF கடனுதவிக்கு பின்னர் மக்களின் ஆதரவு ரணிலுக்கு கூடுமாகவே இருந்தால் சஜித்தின் அணி சின்னாபின்னமாக உடைந்து மீண்டும் ஐக்கிய தேசிய கட்சி புத்துயிர் பெற வாய்ப்புள்ளது .



ரணிலின் IMF கடன் சம்பந்தமான உரையிலும் கூட என்னோடு இணைந்து பணியாற்றுங்கள் என்று கூறும் அழைப்பு முழுக்க முழுக்க சஜித்துக்கும் அவரது அணிக்கும்தானே தவிர வேறு யாருக்கும் இல்லை என்பதே உண்மை பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பயணிக்க இதுவரை ரணில் பூரண திருப்தி கொள்ளவில்லை என்பதே உண்மை காரணம் நாட்டு மக்களின் அழுத்தங்களை பொறுத்து கொண்டு அவர்களுடன் பயணிக்க ரணில் ஒன்றும் அரசியல் அனுபவம் இல்லாதவர் இல்லை. ரணில் பொதுஜன பெரமுனவுடன் பயணிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் எந்த நேரமும் உறங்காமல் காவல் காக்கவேண்டிய கடப்பாடு ரணிலுக்கு உள்ளது இதேவேளை மஹிந்தவின் பிரதமர் பற்றிய கதை நிச்சயமாக ரணிலுக்கு அடுத்த அழுத்தத்தை கொடுக்கும்.



அருண் செல்வராஜ்

பிரதேசசபை தேர்தல்களை பின்போட்டு அடுத்து ஒருவேளை ஜனாதிபதி தேர்தலுக்கு ரணில் தயாராகினால் நிச்சயமாக மஹிந்தவுடனான தனது உறவை தொடர விரும்பமாட்டார். அவ்வாறு ஒருவேளை நடந்தது என்றால் அது ரணில் தனக்கு வெட்டிக்கொண்ட குழியாகவே கருதப்படும். IBS கடன் திட்டத்தை சஜித் தொடர்ந்து விமர்சித்து வருகிறார் அது அவருடைய அரசியலுக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது ஒன்று சரியான தெளிவான நிலைப்பாட்டை கொண்டு எதிர்க்கவேண்டும் அல்லது தெளிவான முடிவோடு ஆதரிக்க வேண்டும் அதை விடுத்தது அங்கொன்றுமாய் இங்கொன்றுமாய் சஜித் இருப்பது அவருடைய அரசியலுக்கு சரியானது இல்லை. சஜித்தோடு இணைந்து பயணிக்கும் தொழிற்சங்கங்கள் இனி எந்த அடிப்படையில் சஜித்தோடு பயணிக்க போகிறது என்பதில் சந்தேகம் உள்ளது சம்பள உயர்வு சலுகைகள் பதவி உயர்வு போன்றவை நிச்சயமாக தொழிளார்கள் மத்தியிலும் தொழிற்சங்கங்கள் மத்தியிலும் முக்கியத்துவமிக்கதாக இருக்கும் ஆக அரச எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரை போன்று மக்களை திரட்டி கொள்ளுவது சஜித்துக்கு இனி மிக இலகுவான முறையில் இருக்காது என்பது உண்மையே.

இதுவரை ரணிலுக்கான வாக்கு வங்கியானது அவர் எதிர்காலத்தில் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க நேரிட்டால் நிச்சயமாக போதுமானதாக இல்லை இருக்கிற அரசாங்கம் கூட மக்களின் ஆதரவை இழந்த அரசாங்கமாகும் எனவே பிரதான எதிர்க்கட்சியும் முன்னாள் அவர்களுடைய சகாக்களை கொண்ட கட்சியுமான சஜித்தின் ஆதரவு நிச்சயமாக ரணிலுக்கு தேவை. அப்படி ஒன்று நடக்குமாக இருந்தால் எதிர்காலத்தில் ரணில் ஜனாதிபதி சஜித் பிரதமர் என்கிற நிலை உருவாகலாம் அதுவே சஜித்தின் ஜனாதிபதி கனவுக்கு அவர் இடும் ஆரம்ப புள்ளியாக இருக்க நல்ல வாய்ப்பாகும் ஆனால் அதை தவிர்த்து ஆரம்பமே ஜனாதிபதியாக வேண்டும் என்றால் இருக்கிற தனது ஆதரவாளர்களை கட்டிப்போட்டு வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு ரணில் இடம் கொடுப்பாரா என்கிற கேள்வியும் இருக்கிறது. இனி வரும் காலங்களில் தென்னிலங்கை அரசியல் நகர்வுகள் மிக தீர்க்கமான ஒன்றாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை ரணிலின் அடுத்த நகர்வு நிச்சயமாக ஜனாதிபதி தேர்தலை நோக்கிய ஒன்றாக இருக்கும் பட்சத்தில் அரசாங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களை விடவும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவு மிக முக்கியம். எனவே சஜித் ரணில் கூட்டணி ஒருவேளை வந்தால் ரணிலின் ஜனாதிபதி கனவு பிரகாசமாகும். பொறுத்து இருந்து பார்ப்போம் அரசியலில் மாற்றங்கள் மாறாத ஒன்றாகும் .

**சஜித்தின் அடுத்தகட்ட நகர்வு என்னவாக இருக்க போகிறது என்பதில் பாரிய கேள்விகள் உள்ளன. ஒரு வேளை எதிர்காலத்தில் ரணிலின் தனி ஒருவன் நிலை சஜித்துக்கு வரலாம் என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கூற்றாக உள்ளது. ரணிலின் மீதுள்ள மக்களின் வெறுப்பின் காரணமாகவே சஜித்தின் அணி ரணிலின் பக்கம் போகாமல் இருக்கிறார்கள். அதில் ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனு நாணயக்கார முதலானோர் சற்று மாறுபட்டு ஆரம்பத்திலேயே ரணிலோடு ஒட்டி கொண்டார்கள்.**

# ஈழத்து சினிமாவில் குறுந்திரைப்படங்களின் வகிபாகம்

சினிமா என்னும் கலைவடித்தின் வயது நூறினைத் தாண்டிவிட்டது. தமிழ்பேசும் மக்களுக்கும் சினிமாவுக்குமான பரிச்சயம்கூட 100 வருடங்களை எட்டிவிட்டது. ஆனால் ஈழத்துத் தமிழ்ச் சு10ழலின் திரைப்பட உருவாக்கப் பாரம்பரியமானது சொற்ப காலங்களைக் கொண்டதாகும். நூறுவருட வரலாறு கொண்ட ஒரு கலைப் பாரம்பரியத்தைக் கிட்டத்தட்டப் பூச்சியத்தில் இருந்து ஆரம்பிப்பது போன்றதுதான் ஈழத்துத் தமிழ்ச் சினிமா முயற்சி. இந்தியச் சினிமா ஏறத்தாள 100 வருட வரலாற்றுப் பாரம்பரியத்தினைக் கொண்டமைந்ததாக உள்ளது. சரியோ தவறோ ஆரோக்கியமானதோ ஆரோக்கியம் அற்றதோ இத்தனை ஆண்டுகால சினிமாப் பாரம்பரியம் அந்த அனுபவம் அந்தப் படிப்பினைகள் அங்கு தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு வந்துகொண்டிருக்கின்றன. தமக்குரிய சினிமா தொடர்பான புரிதல்கள் நுட்பங்கள் அறிதல்கள் அவர்கள் மத்தியில் இரத்தமும் சதையுமாகப் பரவி இருக்கின்றன. புதிதாக அங்கு திரைப்படத் துறையில் நுழையும் ஒவ்வொருவரும் சு10னியத்துக்குள் இல்லை. அவர்களைச் சுற்றி அவர்களுக்கான சினிமாவுக்கான வழிகாட்டல்கள் நிரம்பியிருக்கின்றன. அந்தக் கடலுக்குள் குதிப்பவர்கள் எவ்வாறோ வழிகாட்டப்படுவர். ஆனால் அத்தகைய கடல் ஏன் குளம்கூட ஈழத்துச் சு10ழலில் ஒரு போதும் இருந்ததில்லை.

இலங்கையில் தமிழ்த் திரைப்பட வரலாறு 50 ஆண்டுகாலம் கொண்டது என்று பொதுவாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் 50 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தமிழ்ச் சினிமாப் பாரம்பரியத்துக்கும் இன்று பேசப்படும் அல்லது முயற்சி செய்யப்படும் ஈழத்துத் தமிழ்ச் சினிமா முயற்சிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்பதுதான் யதார்த்தம். இன்றைய ஈழத்துத் தமிழ்ச் சினிமாச் செயற்பாடுகள் அல்லது முயற்சிகள் 90களின் நடுப்பகுதியில் இருந்து ஆரம்பமாகின்றன. 80களுக்கு முன்னர் நடைமுறையில் இருந்த இலங்கைத் தமிழ்ச் சினிமா முயற்சிகளை இந்தியச் சினிமாவின் விரிவாக்கமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாகவே பார்க்க முடிகின்றது. ‘அவர்கள் அங்கு செய்கின்றார்கள் நாங்கள் இங்கு அதே மாதிரிச் செய்வோம்’ என்கின்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஆகும். அதுமட்டுமன்றி ஒரு சில தனிநபர் முயற்சிகளாக அவை இருந்தனவே ஒழியொ ஒரு திரைப்படத் தொழிற்துறையாகவோ அல்லது ஒரு தனித்துவமான சினிமாப் பாரம்பரியமாகவோ அவை வளர்த்தெடுக்கப்படவில்லை. தமிழ்த் திரைப்படத் துறைக்கான உட்கட்டுமானங்கள் எதுவும் கட்டியமைக்கப்படவும் இல்லை. ஒரு சமூக அசைவியக்கமாகவும் அது முன்னெடுக்கபடவில்லை.

இந்நிலையில்தான் காலத்தினதும் சு10ழலினதும் உந்துதலினால் ஈழத்துச் சு10ழலில் 90களின் நடுப்பகுதியில் ஒரு சிலர் தன்னார்வத்தோடு திரைப்படம் செய்ய வெளிக்கிட்டார்கள். அந்தத் தன்னார்வப் படைப்பாளிகளுக்குக் கைகொடுத்து அவர்களை ஊக்குவித்தவர்கள் அல்லது தத்தெடுத்துக் கொண்டவர்கள் விடுதலைப் புலிகள் ஆவர்;. அதன் பின்னரே திரைப்பட உருவாக்கம் எமக்கான சினிமா மாற்றுச் சினிமா ஈழத்துத் தமிழ்ச் சினிமா போன்ற கருத்துநிலைகள் ஈழத்துத் தமிழ்ச் சூழலில் பிரபல்யம் அடையத் தொடங்கின. எடுத்த எடுப்பில் முழுநீளத் திரைப்படங்கள் செய்ய வெளிக்கிட்ட தன்னார்வப் படைப்பாளிகளைக் குறுந்திரைப்படப் படைப்பாக்கத்தை நோக்கித் திசைதிருப்பி அல்லது வழிப்படுத்தி விட்டவர்களும் விடுதலைப் புலிகள்தான். சச்சி மாஸ்டர் (ஞானரதன்) போன்றவர்கள் விடுதலைப் புலிகளின் நிதர்சனம் திரைப்படப்பிரிவினரை வழிப்படுத்துவதிலும் திரைப்படக் பயில்நெறிகளை நடைமுறைப்படுத்துவதிலும் பெரும் உழைப்பினைச் செயவிட்டனர். நிதர்சனம் வெளியீடாக மாதா மாதம் வெளிவந்து கொண்டிருந்த ‘ஒளிவீச்சு’ காணொளியானது அதன் ஒவ்வொரு இதழிலும் ஒரு குறுந்திரைப்படத்தையோ அல்லது ஒரு குறும் ஆவணப்படத்தையோ கொண்டிருந்தது. இத்தகைய குறுந்திரைப்படங்கள் பற்றிய விசமர்சனங்களையும் குறிப்புகளையும் சிறு சஞ்சிகைகளில் எழுதுவதன் மூலம் குறுந்திரைப்படங்கள் பற்றிய ஒரு தேடலைப் பல இளைஞர்கள் மத்தியில் அ.யேசுராசா போன்ற இலக்கியொ சினிமா விமர்சகர்கள் உருவாக்கியிருந்தார்கள். அதன் தொடர்ச்சியாக 2002 ஆண்டு பிரித்தானியாவைச் சார்ந்த ஸ்க்றிப்ட்நெற் நிறுவனம் யாழப்பாணத்தில் குறுந்திரைப்பட உருவாக்லுக்கான பாரிய பயிற்சி நெறியினை யாழ் பல்கலைகழக்கழத்துடன் இணைந்து ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து ஸ்க்றிப்ட்நெற் நிறுவனம் 2009 ஆம் ஆண்டு வரைக்கும் பெருவாரியான தமிழ் பேசும் இளைஞர்களுக்கு துறைசார் பயிற்சிகளை வழங்கியும் தொடர்ச்சியான குறுந்திரைப்பட படைப்புகளை மேற்கொண்டும் வந்தது. இத்தகைய பயிற்சி நெறிகள் பல்வேறு பாகங்களில் இருந்தும் உருவான படைப்புகள் அவற்றுக்குக் கிடைத்த அங்கீகாரங்கள் ஊடக ஆதரவுகள் என்பன இன்று ஈழத்துச் சு10ழலில் திரைப்பட உருவாக்கம் மற்றும் குறுந்திரைபடப் படைப்புகள் சார்ந்து ஒரு அலை எழவும் அது பற்றிய தன்னம்பிக்கை வளரவும் முக்கிய காரணமாக இருந்தன.

90களில் பூச்சியத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஈழத்துத் தமிழ்ச் சினிமா முயற்சியானது இன்று ஒரு சமூக அசைவியக்கமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. ஆயினும் இந்த அசைவியக்கமானது பயிற்சிகள் பரீட்சார்த்தங்கள் என்ற நிலையைத் தாண்டிப் போகவில்லை என்பதும் யதார்த்தமான விடயம் ஆகும். இத்தகைய நிலைமையில் ஈழத்துச் சினிமா முயற்சியில் குறுந்திரைப்படப் படைப்பாக்கச் செயற்பாடுகளின் வகிபாகம் என்பது மிகவும் காத்திரமான ஒன்றாகவும் அத்தியாவசியமானதாகவும் இருந்து வருகின்றது.

ஈழத்துத் தமிழ்ச் சூழலில் திரைப்பட முயற்சியில் இருக்கும் அனைத்துப் படைப்பாளிகள் நடிகர்கள் மற்றும் இதர கலைஞர்களுக்கான பயிற்சியாகக் குறுந்திரைப்படங்கள் அமைகின்றன. இன்றைய நிலையில் ஈழத்துச் சு10ழலிலும் சரி புலம்பெயர் தேசங்களிலும் சரி ஏனைய நாடுகள் இனங்களிடையேயும் சரி இரண்டு விதமான குறுந்திரைப்பட முயற்சிகள் நடைபெற்று வருவதனை அவதானிக்க முடியும். ஒன்று தமது அனுபவங்களை தமது கற்பனைகளை தமது சொந்த சந்தோசத்துக்காக ஒரு சுய வெளிப்பாடாக வெளிப்படுத்தும் குறுந்திரைப்பட முயற்சிகள். ஓவியம் வரைவது போல் ஒரு கவிதையை எழுதுவது போல் ஒரு குறுந்திரைப்படத்தை அல்லது அத்தகைய ஒரு காணொளியைப் படைப்பதற்குத் தொழிநுட்பத்தின் இன்றைய வளர்ச்சியும் அதன் இலகு பாவனையும் வசதி செய்து கொடுக்கின்றது. ஒருவர் தனது காதலிக்கு அல்லது தன் பெற்றோருக்கு தன் நண்பர்களுக்கு ஒரு வாழ்த்து மடல் எழுதிக் கொடுப்பதுபோல் ஒரு குறுந்திரைப்படத்தைச் செய்துகொடுக்க முடியும். பயின்முறையில் செய்யப்படும் குறுந்திரைப்பட முயற்சிகள் அல்லது அமைச்சர் படைப்பாக்கங்கள் என்றும் இத்தகைய செயற்பாட்டைச் சொல்லலாம். மற்றையது ஒரு திரைப்படப் படைப்பாளியாக வரவேண்டும் எனும் நோக்குடன் செய்யப்படும் முயற்சிகள். தன் துறை கனவுகள் நீண்டகால இலட்சியம் அல்லது நோக்குடன் அதற்கான பயிற்சியாகச் செய்யப்படும் குறுந்திரைப்பட முயற்சிகள் இவை. இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால் திரைப்படப் படைப்பாளியாக வர வேண்டும் எனும் நோக்கில் மேற்கொள்ளப்படும் குறுந்திரைப்பட முயற்சிகளுக்கும் சுய வெளிப்பாட்டுக்காகொ சுய சந்தோசத்துக்காகப் பயின்முறையில் செய்யப்படும் குறுந்திரைப்பட முயற்சிகளுக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் உண்டு. ஒரு திரைப்படப் படைப்பாளியாக வர நினைப்பவர் குறுந்திரைப்பட உருவாக்கத்தைத் தனக்கான சுய கற்கைநெறியாகப் பாவனை செய்துகொள்ள வேண்டும். தனது குறுந்திரைப்படச் செயற்பாட்டின் ஊடாகத் திரைப்பட உருவாக்கத்திற்கான திறனையும் அதற்கான நுட்பங்கள் உத்திகளைக் கற்றறிந்து கொண்டே இருக்க வேண்டும். திரைப்படக் கல்லூரியில் பயிலும் மாணவர் போன்ற பாவனையுடன் செயற்பட வேண்டும். திரைப்படக் கல்லூரியில் இருந்து ஒருவர் வெளியேறும்போது அவரிடம் ஒரு படைப்பு இருக்க வேண்டும். அந்தப் படைப்பு அவரின் அடையாளமாகொ அவருக்கு ஒரு விசிட்டிங் கார்ட்டாக இருக்க வேண்டும். அதனைக் காட்டியவுடன் இவர் எத்தகைய படைப்பாளி சமூகம் பற்றியும் திரைப்படப் படைப்பாக்கம் பற்றியும் இவர் எத்தகைய அணுகுமுறையினைக் கொண்டுள்ளார் அல்லது எத்தகைய மனப்பாங்குடன் உள்ளார் என்பதனை அந்தப் படைப்பு ஓரளவு சொல்லிவிட வேண்டும்.

அடுத்தது குறுந்திரைப்படப் படைப்பாக்கத்தை ஒரு சவாலாக ஏற்க வேண்டும். பெரும்பாலான குறுந்திரைப்படப் படைப்பாளிகள் குறுந்திரைப்படத்துக்கான நேர வரையறையைத் தமக்கு வசதியான விடயமாக எடுத்துக் கொள்ளும் நிலை காணப்படுகின்றது. வுடநல வயமந வை கழச பசயவெநன. உண்மையில் ஒரு குறுந்திரைப்படத்துக்கான மூளை உழைப்பு ஒரு முழுநீளத் திரைப்படத்துக்குத் தேவையான மூளை உழைப்பினை விட எவ்விதத்திலும் குறைவானது அல்ல. மூளை உழைப்பு எனும்போது கதை மற்றும் திரைக்கதை உருவாக்கம் என்பன முதன்மை பெறுகின்றன. ஒரு நல்ல திரைக்கதையை உருவாக்கிவிட்டால் ஒரு திரைப்படத்தின் 70 வீத வேலை முடிந்துவிடும். ஒரு முழுநீளத் திரைப்படத்துக்கான திரைக்கதையை உருவாக்கும்போது உள்ள சவால் எவ்வாறு பார்ப்போரை இரண்டு அல்லது இரண்டரை மணி நேரம் கட்டிப்போட்டு வைத்திருப்பது என்பதாகும். ஒரு குறுந்திரைப்படத்துக்கான திரைக்கதையை உருவாக்கும்போது உள்ள சவால் எப்படி 10 அல்லது 15 நிமிடத்துக்குள் ஒரு முழுமையான கதையைச் சொல்வது என்பதாகும். மொத்தத்தில் இரண்டும் கடினமான இலக்குகளே. சவாலான விடயங்களே. இன்னும் சொல்லப்போனால் இரண்டு மணி நேரத்துக்குள் ஒரு கதையைச் சொல்வதை விட 10 அல்லது 15 நிமிடங்களுக்குள் ஒரு கதையைச் சொல்வது அதிக சவால் உள்ள விடயம் ஆகும்.

எது நடைமுறைச் சாத்தியமானது? எது ஆரோக்கியமானது? எது சமூக அக்கறை கொண்டது? எது எமது மக்களை மருட்கைக்குள் தள்ளாது அவர்களை விழிப்புணர்வு நிலைக்கு உயர்த்த வல்லது? எது எமது படைப்புகளைச் சர்வதேச உலகிடம் கொண்டுபோய்ச் சேர்க்கும்? எது எமது வாழ்வியலை யதார்த்தத்துடன் வெளிப்படுத்தும்? எது எமக்கான விடுதலைக்கு வழிவகுக்கும்? வர்த்தக ரீதியில் எமது படங்களை வெற்றியடைச் செய்ய எது எமக்கான சிறந்த வழி? எல்லாவற்றுக்கும்மேல் எது புத்திச்சாலித்தனமானது?

மேல்கூறப்பட்ட நிலையில் நின்று பார்க்கும்போது இந்தியத் தமிழ்ச் சினிமா பயன்படுத்தும் ஆரோக்கியமற்றொ சமூக விரோத உத்திகளை முற்றுமுழுதாகப் புறக்கணித்துவிட்டு மாற்று அல்லது தனித்துவமான கதைசொல்லல் உத்திகளைப் பயன்படுத்துவது என்பதே எமக்கான வழியாக இருக்க முடியும். எமது கதைகள் தற்புதுமை உள்ளனவாகொ எமது மக்களின் வாழ்வியலை யதார்த்தமாகப் பிரதிபலிப்பவையாக இருக்க வேண்டியுள்ளது. அப்படி வரும்போது நாம் நமது மக்களைப் புதிய சினிமா அனுபவத்துக்குப் பழக்கப்படுத்த வேண்டியுள்ளது. அதற்கு மக்களைத் தொடர்ச்சியாக இந்த அனுபவத்துக்குள்ளாக்கிக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. ஈழத்துத் தமிழ்ச் சினிமா என்னும் புதிய சினிமாப் பாணியை எமது பேச்சு மொழிகளை வட்டார வழக்குகளை மக்களுக்குப் பழக்கப்படுத்த வேண்டியுள்ளது. இதற்குச் சரியான வழியாகக் குறுந்திரைப்படங்கள் அமைகின்றன. குறைந்த செலவில் அதிக மூளை உழைப்புடன் அதிகளவான குறுந்திரைப்படங்கள் படைக்கப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். அவை மக்களிடம் சென்றடைவதற்கான வழிவகைகள் செய்யப்பட வேண்டும். ஒருபுறம் முழுநீளத் திரைப்படப் படைப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் அதைவிட வேகமாகக் குறுந்திரைப்படப் படைப்புகள் அதாவது ஈழத்துத் தமிழ்ச் சினிமாவுக்கான தனித்துவ யதார்த்தத்தைக் கொண்ட குறுந்திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு அவை மக்களிடம் சென்றடைந்து கொண்டே இருக்க வேண்டும்.

எமது திரைப்படங்களும் எமது கதைகளும் சர்வதேச சமூகத்தைச் சென்றடைய வேண்டியுள்ளது. ஈழத்துத் தமிழ்ப் படங்களுக்கான இடம் ஒன்று சர்வதேச சினிமா உலகில் உள்ளது என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். பொதுவாகப் போர் மற்றும் போருக்குப் பிந்தைய சு10ழல்களில் இருந்துவரும் கதைகளைக் கேட்பதற்கான ஆர்வமும் எதிர்பார்ப்பும் மக்களிடம் இருந்து கொண்டே இருக்கின்றது. இது இதிகாசக் கதைகளின் காலம் முதல் இருந்து வரும் ஒரு உலகப் பொதுமையான மனித மனப்பாங்காக உள்ளது. திரைப்பட உலகில் இது மிக அதிகமாக உள்ளது. இந்த வாய்ப்பை ஈழத்துத் தமிழ்ச் சினிமா பயன்படுத்துதல் அத்தியாவசியமான விடயமாகும்.

ஈழத்துத் தமிழ்ச் சினிமாவானது போர் மற்றும் போருக்குப் பிந்தைய சூழலை யதார்த்தமாகப் பிரதிபலிக்கும் பட்சத்தில் சர்வதேச சினிமா அரங்கில் முக்கிய இடத்தினைப் பெறும் வாய்ப்பினைக் கொண்டுள்ளன. ஆனால் முழுநீளத் திரைப்படங்கள் அதைச் செய்யும்வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. குறுந்திரைப்படங்கள் அதற்கு மிகப் பொருத்தமான வழியாக உள்ளன. உண்மையில் குறுந்திரைப்படங்களைச் சர்வதேச சமூகத்திடம் பிரபல்யப்படுத்துவதன் மூலம் ஈழத்து முழுநீளத் திரைப்படங்களுக்கான வரவேற்பை உருவாக்கிக் கொள்ள முடியும். நமது கதைகளைப் பெரிய திரையில் பார்ப்பதற்கான அவர்களின் ஆவலைத் தூண்ட முடியும். இன்று ஆங்காங்கே ஈழத்துக் குறுந்திரைப்படங்கள் சர்வதேச திரைப்பட விழாக்கள் இணையத்தளம் தொலைக்காட்சிகள் சிறப்புத் திரையிடல் நிகழ்வுகள் மூலம் சர்வதேச சமூகத்திடம் செல்ல ஆரம்பித்துவிட்டன. இந்தப் போக்கு அதிகரித்த வண்ணம் இருக்க வேண்டும். அதேநேரம் நமது படைப்பாளிகள் ஈழத்துத் தமிழ்ச் சினிமாவுக்கான தனித்துவம் நமது மக்கள் நமது வாழ்வியல் நமது பண்பாடு நமது விடுதலை போன்ற விடயங்களின் காத்திரத் தன்மையுடனும் செயற்பட வேண்டும்



# தமிழீழம் என்ற கோரிக்கையை முதன் முதலில் முன்வைத்த வி. நவரட்ணம்

1960 ஆம் ஆண்டுகளின் இறுதியில் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் நிறுவுனரான வி. நவரட்ணம் ஐயா தமிழீழம் என்ற கோரிக்கையை முதன் முதலில் முன்வைத்தவர். இவருக்கு 95 வயதாக இருந்தபோது 2005 ஆம் ஆண்டும் ஜூலை மாதத்தில் ஒரு ஊடகம் அவரைப் பேட்டி கண்டிருந்தது. இதன்போது அவர் தமிழீழம் என்ற கோரிக்கையை முன்வைத்தார். ஆனால் இவர் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி காலமானார். மேற்படி 2005 ஆம் ஆண்டின் பேட்டியில் தமிழர்களும் சிங்களவர்களும் ஒரே அரசாங்கத்தின் கீழ் வாழ முடியாது தமிழர்களுக்கென்று தனிநாடு மட்டுமே இதற்கான தீர்வு என்று அவர் வலியுறுத்தியிருந்தார். இவரது கட்சி 1970 ஆம் ஆண்டின் தேர்தலில் போட்டியிட்டபோது சிறியளவு ஆதரவே இருந்தது. ஆனால் சில வருடங்களுக்குள்ளாகவே இவரது கட்சிக்கு தமிழர்கள் தமது ஆதரவைத் தெரிவித்திருந்தன. 1976 ஆம் ஆண்டின் வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்பது இவரது கட்சிக் கொள்கையின் நகல் என்றும் நவரட்ணம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

நவரட்ணம் ஐயா1910 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதியன்று ஊர்காவற்றுறையிலுள்ள கரம்பனில் பிறந்தார். இவர் இலங்கை சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்று 58 ஆண்டுகளாக சட்டத்தரணியாக இருந்தார் 1963 முதல் 1970 ஆம் ஆண்டு வரையில் ஊர்காவற்றுறை தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவராவார். தந்தை செல்வா தலைமையில் 1949 ஆம் ஆண்டில் குடியரசுக் கட்சி உருவாக்கப்பட்டபோது திரு. நவரட்ணம் மற்றும் டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் ஆகியோர் அக் கட்சியின் கூட்டு செயலாளர்களாக இருந்தார்கள். ஆனால் 1970 ஆம் ஆண்டில் தனிக் கட்சி உருவாக்கித் தேர்தலில் நின்றபோது அவரது கட்சி உறுப்பினர்கள் அனைவருமே தோல்வியைத் தழுவினர். ஆனால் ஆறு ஆண்டுகளுக்குள் நவரட்ணம் அவர்களின் அரசியலை அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஆதரித்தன. 1991 ஆம் ஆண்டில் இவர் கனடா மொன்றியலில் இருந்த கால கட்டத்தில் தமிழ் இனத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும் வுடந குயடட யனெ சுளைந ழக வுடந வுய அடை யேவழைண என்ற நூலை எழுதினார். இதன் இரண்டாம் பதிப்பு 1995 இல் வெளிவந்தது. தமிழர் இறைமை என்பது பேரம் பேச முடியாதது என்பது இந் நூலின் முக்கிய கருவாகும்.

2005 ஆம் ஆண்டு பேட்டியின்போது சுதந்திரத்தின் ஒருதலைப் பட்சமான பிரேரணையை ஈழத் தமிழர்கள் முன்மொழிய வேண்டும் என்று தனது கருத்தைத் தெரிவித்தார். சிறி லங்கா என்பது இலங்கை அல்ல. 1972 ஆம் ஆண்டு சட்டத்துடன் வந்த சிறி லங்கா என்பது சட்ட விரோதமானது. சுதந்திரத்துக்குப் பின்னர் வந்த அனைத்து அரசியலமைப்புக்களும் தமிழர்களை அடிமைப்படுத்தும் நோக்குடனேயே அமைக்கப்பட்டன என்றார் அவர். ஒஸ்லோவில் எதுவுமே நடக்கப் போவதில்லை. பிரபாகரன் வஞ்சிக்கப்படுவார் என்று நான் எண்ணவில்லை. இடைக்கால சுயாட்சி அமைப்பால் சிலவற்றை சாதிக்கலாம் என்று விடுதலைப் புலிகள் எண்ணியிருக்கலாம்

ஆனால் இதன்மூலம் எதுவுமே நடக்கப் போவதில்லை என்பதே எனது கருத்தாகும். சில குறுக்கு வழிகள் இருக்கக் கூடும் என்று இந்த நடைமுறையில் ஈடுபட்டுள்ளவர்கள் நினைக்கக்கூடும். ஆனால் எனக்கு நம்பிக்கை இல்லை. கடந்த காலங்களில் எத்தனை ஒப்பந்தங்கள் போடப்பட்டன? ஆனால் ஒன்றுகூட அமுலுக்கு வரவில்லை. புலிகள் இப்போது ஒரு வரிசையில் செல்கிறார்கள் எனக்கு இது பற்றி பெரிதாக விளங்கவில்லை. ஆனால் எதுவும் சாதகமாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் எதிலும் ஈடுபடுவதிலும் அர்த்தமில்லை. அவை அனைத்துமே தமிழர்களை ஏமாற்றவே உள்ளன. நாங்கள் சமஷ்டி ஆட்சியைக் கேட்டோம். ஆனால் இது குறித்து நாங்கள் எடுத்த அனைத்து முயற்சிகளுமே தோல்வி கண்டன. ஆகவேதான் நான் தமிழர் சுயாட்சிக் கழகத்தை ஆரம்பித்தேன். உடனிருக்க வேண்டிய தேவை இருப்பின் சிங்கள் மற்றும் தமிழ் இனநாடுகள் இருதரப்பு ஒப்பந்தங்களைப் போட்டுக் கொள்ளலாம். ஆனால் கூட்டுக் குழு போன்ற தொடர்ச்சியான சு10ழ்ச்சிப் பொறிகள் எவையும் இருக்கக்கூடாது. இந்தியா அல்லது பிற நாடுகள் எவையுமே எங்களது அபிலாஷைகள் குறித்து எமக்கு கட்டளையிடக்கூடாது. நாங்களே எங்கள் தேவைகளைக் கவனிக்க வேண்டும்.



இந்தியா பற்றிக் கூறியுள்ள நவரட்ணம் அவர்கள் இரண்டு இந்தியாக்கள் உள்ளன. புதுடில்லி இந்தியாவிலிருந்து வேறுபட்டது. புதுடில்லிக்கு தனது நண்பர்கள் யார் என்பது தெரியாது. தமிழர்களை அடிமைப்படுத்தி தனக்கு நன்மைகளை அடையலாம் என அது நினைக்கிறது என்றார். இந்தியாவின் முக்கிய ஊடகங்கள் எழுதுபவற்றை வாசிக்கும்போது எனது இரத்தம் கொதிக்கிறது. சர்வதேச சமூகத்துக்கும் சிங்கள அரசியல் போக்கு குறித்து அவ்வளவாகத் தெரியாது. அண்மையிலேயே அவை ஓரளவுக்கு உணரத் தொடங்கியுள்ளன. சர்வதேசம் கடந்த கால வரலாற்றை உற்றுக் கவனிக்க வேண்டும். ஆனால் உலகை ஏமாற்றக் கூடிய அளவுக்கு சில தமிழர்கள் சிங்கள அரசாங்கத்துடன் தொடர்ந்து பிரச்சாரம் செய்வது சிங்களத்துக்குக் கிடைத்த அதிர்ஷ்டமாகும். இப்போக்கு திருச்செல்வத்துடன் தொடங்கியது. சந்திரிக்காவுடன் லக்ஷ்மன் கதிர்காமர் தமிழர்களுக்கு எதிரான போக்கைக் காட்டினார். கதிர்காமர் தன்னை ஒரு மனிதராகப் பார்க்கும்படியும் ஒரு தமிழராக முத்திரை குத்த வேண்டாம் என்றும் உலகுக்குக் கூறினார். இவர் ஊர்காவற்றுறை மண்கும்பானில் பிறந்து யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயின்றவர். இவரது தமையனாரான ராஜன் கதிர்காமர் ஒரு தடவை இலங்கைக் கடற்படைத் தளபதியாக இருந்தவர்.

ராஜன் கதிர்காமர் வித்தியாசமாக யோசித்தார். இவர் யாழ்ப்பாணத் தீவுகள் ஏழையும் சு10ழவுள்ள கடலை ஆழப்படுத்தி அங்கு ஒரு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகத்தை உருவாக்க எண்ணினார். இவர் ஒரு தமிழராக உணர்ந்து செயற்பட்டார். நீலன் திருச்செல்வத்தின் தந்தையாரான திருச்செல்வம் 1965 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னர் தாம் ஒரு அமைச்சர் பதவியைப் பெற்று டட்லி சேனாநாயக்கவுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கிய உடனுமே தமிழர்கள் ஏமாற்றப்படத் தொடங்கிவிட்டனர் என்று நான் நம்புகிறேன். இது 1968 இல் உறுதிப்படுத்தப்பட்டது. திருச்செல்வம் திருகோணமலையை விட்டுக் கொடுத்தார். அமிர்தலிங்கம் சேருவவிலவை விட்டுக் கொடுத்தார். இவர்கள் எல்லாம் சிங்கள மயமாக்கலுக்கு உதவி செய்தார்கள்.

செல்வநாயகம் உட்பட சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் எவருமே 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்புக் கூட்டத்தில் பங்கெடுக்கவில்லை. சேர் பொன் இராமநாதன் தமிழர்கள் வஞ்சிக்கப்படுவதை உணர்ந்தார். ஆனால் அவரது சொந்த மருமகன் மகாதேவாவோ அல்லது அவரது மருமகன் நடேசபிள்ளையோ இதை உணர்ந்து கொள்ளவில்லை. பின்னர் ஜி.ஜி. பொன்னம்பலம் இந்த வரிசை அரசியலுக்குள் இழுக்கப்பட்டார். அவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்புத் தமிழர்களாகியமை பிரச்சனையாகியது. இதன்மூலம் ஏதாவது ஒன்று சாத்தியமில்லை என்றால் அதைப்பற்றி மறந்துவிட வேண்டும் என்று இந்த அரசியல் தலைவர்களில் சிலர் தமிழர்களுக்கு புத்திமதி கூறினர். தமிழர்களின் உரிமைகளுக்கு எதிராக இவர்கள் இவ்வாறு கூறினர். பிரபாகரனின் அரசியலில் இதுபோன்ற ஒத்துழைப்பு அநீதிகள் இடம்பெறவில்லை. சமாதானப் பேச்சுக்களின் போர்வையில் இழுப்பதே சிங்களத் தலைவர்களின் தந்திரமாகும். பிரபாகரனின் காலத்தின் பிறகு அல்லது அவருக்கு வயதானவுடன் தமது விருப்புக்களுக்கு உடன்படச் செய்வதன் மூலம் தமது நோக்கங்களை நிறைவேற்ற அவர்கள் விரும்பினர். வயதானவுடன் சிங்கள அரசுடன் கூட்டுச் சேர்ந்த பொன்னம்பலம் மற்றும் சுந்தரலிங்கம் போலவே அவர்கள் பிரபாகரனையும் எண்ணினர். 'எவ்வளவு காலத்துக்குத்தான் பிரபாகரன் இருக்க முடியும். இவருக்குப் பின்னர் ஒரு பிரபாகரன் வரமாட்டார்' என்பதே சிங்களத்தின் வாதம் என்றார் நவரட்ணம் அவர்கள்.

# வெடுக்குநாறிமலை விக்கிரகங்கள் சேதம்;
# யாழில் நேற்று கண்டனப் போராட்டம்










வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய ஆதிலிங்கம் உள்ளிட்ட விக்கிரகங்கள் சிதைக்கப்பட்ட துஷ்ட செயலைக் கண்டித்து நேற்று யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் - நல்லை ஆதினம் முன்பாக சைவ மகாசபையின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் இடம்பெற்றது.


போராட்டத்தில், இந்து, கிறிஸ்தவ மத குருமார்கள், சைவ மகா சபை பொதுச் செயலாளர் வைத்தியர் பரா.நந்தகுமார், அரசியல்வாதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், ஆதிச் சைவத்தை அழிப்போர்மீதி இன்றி அழிந்து போவர், தொல்லை தரும் தொல்லியல் திணைக்களம், ஆதசிவன் சிலை உடைப்பு இன அழிப்பின் வன்மம் உள்ளிட்ட கோஷங்களை எழுப்பினர்.

## ஆதிலிங்கேஸ்வரர் ஆலய அழிப்பு ஒரு கேவலமான அரசியல்தந்திரம்

வடொகிழக்கினை சிவ பூமியாக சித்திரிக்கும் வேலை திட்டத்தின் ஓர் அங்கமாக ஆனையிறவில் நடமாடும் சிவன் உருவச் சிலை வைக்கப்பட்டது. அன்று ஆனையிறவை விடுதலைப் புலிகள் உயிர் தியாகத்தோடு கைப்பற்றிய போது இருந்த மகிழ்ச்சி நடமாடும் சிலை வைக்கப்பட்ட போது ஏற்படவில்லை. வடகிழக்கில் எந்தவொரு பாரிய சலசலப்பையும் ஏற்படுத்தவுமில்லை. இதற்கு மத்தியில் திருவள்ளுவர் இந்துவா? இல்லையா? எனும் பட்டிமன்றமும் நீண்டு செல்கின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் யுத்த வெற்றியை மீண்டும் அடையாளப்படுத்தும் முகமாக முப்படைகளின் தளபதி சவேந்திர சில்வா தாது கோபுர திரை நீக்கத்திற்கு சிங்கள நடனத்தோடு அழைத்து வரப்படுகின்றார். இதன் தொடர்ச்சியாகவே கச்சதீவில் திருட்டுத்தனமாக புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. இது சைவர்களை தனியாகவும் கிறிஸ்தவர்களை தனியாகவும் தமிழர்களின் தேசியம் காக்கும் அரசியல் கதைப்போரை தனியாகவும் பிரித்துவிட்டு அரசியல் குளிர்காயும் ஒரு வகை தந்திரம் என்றே கூற வேண்டும். இன்னொரு பக்கம் இந்துக்களையும் கிறிஸ்தவர்களையும் தமது பாதுகாப்புக்காக இந்தியாவை அரவணைப்பை ஏற்றுக் கொள்ள வைக்கும் மனநிலையைத் தூண்டுவதோடு இந்தியாவின் தலையீட்டால் 13 ஐ ஏற்றுக்கொள்ள வைக்கும் அரசியல் சதியும் இதன் மூலம் அரங்கேற வாய்ப்பு உண்டு என்றே பல சமூக ஆர்வலர்களும் தெரிவித்து வருகின்றனர்.


இதேவேளை சரத்வீரசேகர சமய பயங்கரவாதம் வடொகிழக்கில் தலை தூக்கி உள்ளது' என்று கூறியுள்ளதோடு விமல் வீரவன்ச நாடு சிங்கள பௌத்தர்களுக்கே சொந்தமாகும். தமிழர்களுக்கு இந்த நாட்டில் ஒரு அங்குல நிலமும் இல்லை' எனக் கூறியுள்ளார். இது தமிழர்களுக்கு எதிரான அரசியல் சதித்திட்டமாகும். தமிழர்கள் தமது பாதுகாப்புக்காக இந்தியாவையும் 13 ஐயும் நாட அதற்கு எதிராக தெற்கை தூண்டிவிடும் ஒரு அரசியல் நரித் தந்திரமாகும். ஆதலால் வடொகிழக்கு அரசியல்வாதிகள் இது குறித்து நன்று தெளிவாக புரிந்து கொண்டு தமது அரசியல் பயணத்தை மேற்கொள்ளல் வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் அனைவரும் ஓரணி திரளவில்லை என்றால் தமிழர்கள் நிச்சயம் இன்னும் ஓர் அழிவை சந்தித்தே ஆக வேண்டும். நம் வழிபாட்டு உரிமை நீக்கமும் பண்பாட்டு அடையாள அழிப்பும் நிகழ்த்தப்படும் சமநேரத்தில் அதற்கான எதிர்ப்பையும் கண்டனத்தையும் நம் தெய்வங்கள் காட்டிய அறவழியில் அணிதிரண்டு வெளிக்காட்ட வேண்டும்.